ஆரம்பக் கல்வி

௨ 7-8

அக்டோபர், நவம்பர், 1934.

T15ஈ211,N3ஜ
N34.2.7-8
190338

1230

# ஆரம்பக்கல்வி

## ELEMENTARY EDUCATION

10 JUN 1935 MADRAS

பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| கடவுள் வணக்கம் | .... | 145 |
| சாம்பியன் ஸ்கீம் | .... | 146 |
| முதியோர் கல்வி | .... | 149 |
| அரங்கநாதன் | .... | 150 |
| மந்திரி சொற்பொழிவு | .... | 155 |
| அறிவிப்பு | .... | 158 |
| வைணவ சமயம் | .... | 161 |
| உதய குமாரன் | .... | 165 |
| தொழில் அபிவிருத்தி | .... | 169 |
| சுகாதாரப்பகுதி | .... | 171 |
| தகூரின் வரலாறு | .... | 174 |
| உபாத்திமைச்சங்கம் | .... | 177 |
| செய்நன்றி | .... | 180 |
| சங்கக்குறிப்புகள் | ... | 185 |




T15n211, N33
N34.2.7-8
10338

உள் நாடு விலை அணா 1½ மலர் 7. 8. வெளி நாடு அணா 3

# "ஆரம்பக் கல்வி"

## சந்தா விவரம்

வருடம் 1-க்கு தபாற் கூலி உள்பட

| | | |
|---|---|---|
| | இந்தியா, பர்மா, சிலோன், | 1 0 0 |
| வெளி நாடுகளுக்கு | .... .... | 2 0 0 |

குறைந்த சந்தாவில் ஆரம்ப ஆசிரியர்களுக்கெனவே உழைத்து வரும் சஞ்சிகை. ஆரம்பக் கல்வியில் உழைத்துவரும், ஆசிரிய மானேஜர்கள், தாலூக்கா போர்டு, முனிசிபாலிடி ஆசிரியர்கள், ஆசிரியர்கள், மிஷன் பாடசாலை, பஞ்சாயத்து பாடசாலை ஒருவித உபகாரமும் பெறாத பாடசாலைகள், ஆண் பாடசாலை பெண் பாடசாலை, ஆகிய எல்லா ஸ்தாபனங்களையும் ஒன்று படுத்தும் "ஆரம்பக் கல்வி', என்னும் இந்த சஞ்சிகையின் மூலமாய் தத்தம் குறைகள் நீங்கி, ஆரம்பக்கல்வி யாசிரியர்களும், காலச் சக்கரத்தின் முன்னணியில் நிற்க வேண்டும் என்பதே நமது நோக்கம். ஆகையால் ஒவ்வொரு ஆரம்ப ஆசிரியர்களும் அவர்களை நிருவகிக்கும் ஸ்தாபனங்களும் நமது சஞ்சிகையை ஆதரித்து பெண்கள் பகுதி, சிறுவர் பகுதி, ஆசிரியர் பகுதி, கல்வி வளர்ச்சி, என்ற பகுதியின் கீழ் விஷயதானமும், பொருளுதவியும் செய்து வளர்த்த வேணுமாய்க் கோருகிறேன்.

இங்ஙனம்:

பத்திரிகை, ஆசிரியர்.

## விளம்பர விகிதம்.

| | | | |
|---|---|---|---|
| முழுபக்கம் ஒரு தடவைக்கு ரூ. | | | 10 0 0 |
| அரை பக்கம் | ,, | ,, | 5 0 0 |
| கால் பக்கம் | ,, | ,, | 3 0 0 |

நீண்டகால விளம்பரங்களுக்கு மானேஜருக்கு எழுதவும்

உ

ஓம்: பரப்பிரஹ்மணே நம:

# ஆரம்பக் கல்வி

சென்னை மாகாணத்திலுள்ள ஆரம்பாசிரியர்கள், ஆசிரிய மானேஜர்கள், மானேஜர்கள் அபிவிருத்திக்கும், முன்னேற்றத்திற்கும் உழைக்கும் ஓர் உயர்தர செந்தமிழ் மாதாந்திர பத்திரிகை.

பத்திராதிபர்: பி. வீரராகவன் (ஜில்லாக் கல்விச் சபை அங்கத்தினர்)

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

மலர் - 2. 1934ஞு அக்டோபர், நவம்பர். இதழ் - 7,8

## கடவுள் வணக்கம்

அங்கைகொடு மலர்தூவி அங்கமது புளகிப்ப
அன்பினால் உருகி விழிநீர்
ஆறாக வாராத முத்தியின தாவேச
ஆசைக் கடற்குள் மூழ்கிச்
சங்கர சுயம்புவே சம்புவே எனவுமொழி
தழுதழுத் திடவணங்குஞ்
சன்மார்க்க நெறியிலாத் துன்மார்க்க னேனையும்
தண்ணருள் கொடுத்தாள்வையோ
துங்கமிகு பக்குவச் சனகன்முதல் முனிவோர்கள்
தொழுதருகில் வீற்றிருப்பச்
சொல்லறிய நெறியையொரு சொல்லா லுணர்த்தியே
சொரூபானு பூதிகாட்டிச்
செங்கமல பீடமேற் கல்லா லடிக்குள்வளர்
சித்தாந்த முத்திமுதலே
சிரகிரி விளங்கவரு தக்ஷிண மூர்த்தியே
சின்மயா னந்தகுருவே.

# முனிசிபாலிடிகளில் சாம்பியன் ஸ்கீம்

நமது ஆரம்பக் கல்வியுலகில் தற்போது சாம்பியன ஸ்கீமைப்பற்றி ஓர் கிளர்ச்சி நடந்து வருகின்றது. முதலில் அதை இராஜதானி முழுதும் பரப்ப வேண்டுமென்ற எண்ணத்துடன் அத்திட்டம் கிளம்பியது. மகம்மதியர்களும், மிஷனரிகளும், ஆசிரிய மானேஜர்களும் ஆங்காங்கு கூட்டங்கள் கூட்டி கண்டித்தும், மந்திரியவர்களை பேட்டிக் கண்டும், ஒருவாறு அத் திட்டத்தின் வேகத்தை அடக்கினர். மந்திரியாரவர்களும் ஏய்டட் பாடசாலைகளுக்கு யாதொரு கெடுதலும் நேரிடா வண்ணம் பார்த்துக்கொள்வதாக பல வாக்குறுதிகள் கொடுத்திருக்கின்றனர்.

திரு சாம்பியன் அவர்களும், திரு சதாசிவ ரெட்டியார் அவர்களும், ஏற்படுத்திய கன்ஸாலிடேஷன் ஸ்கீமி (Consolidation and Concentration Scheme) னல் ஆரம்பக் கல்வி அபிவிருத்தி யாவதுடன் அரசாங்கத்திற்கும் பணம் மிஞ்சுமென்பது கல்வி யதிகாரிகளுடைய அபிப்பிராயம். அவ்வபிப்பிராயம் சரியென நமக்கு விளங்கவில்லை. ஆயினும் கனம் மந்திரியவர்களுக்கு கல்வி யதிகாரிகள் கஷ்டப்பட்டு திரட்டிய இத்திட்டத்தை அடியோடு தடுத்து விடாமல் முனிசிபாலிடிகளில் இதை அமுலுக்குகொண்டுவந்து பார்க்கலாமென்ற எண்ணத்தினல், டைரக்டர் துரையவர்களுக்கு நமது இராஜதானியிலுள்ள சுமார் 90-முனிசிபல் எல்லைக்குட்பட்ட சகல பாடசாலைகளுக்கும் இப்புது திட்டத்தை தயாரித்தனுப்பும்படி உத்திரவிட்டதாகத் தெரிகிறது.

அதன்படி டைரக்டர் துரையவர்களும் இதற்கென ஒரு ஆபீஸரை ஏற்படுத்தி, அநேகமாக எல்லா முனிசி

190338



பாலிடிகளுக்கும் இப்புது திட்டங்களை தயாரித்து மந்திரியவர்களுக்கு அனுப்பியிருப்பதாக தெரிகிறது. மந்திரியவர்கள் அதை என்ன செய்யப்போகிறாரென்று விளங்கவில்லை. நமக்கு தெரிந்த மட்டில் டிப்டி இன்ஸ்பெக்டர்கள் அனுப்பிய (Maps) படங்களைக் கொண்டும், கணக்குகளைக்கொண்டும் திட்டத்தை தயாரித்ததாக தெரிகிறது. அவ்விதம் ஏற்படுத்தியபோது பல இடைஞ்சல்கள் ஏற்பட்டதாகவும் தெரிகிறது. இத்திட்டங்களெல்லாம் மேஜையின்மேல் உட்கார்ந்து யோசித்தால் சரிவர வருமென்று எமக்குத் தோன்றவில்லை. அந்தந்த இடங்களுக்கு (Special Officer) ஸ்பெஷல் ஆபீஸர் நேராகச் சென்று பரிசீலனை செய்து திட்டத்தை தயாரித்திருப்பாரானல், ஒரு சமயம் இத்திட்டத்தை சற்று நடத்திப்பார்க்கும் வகையில் தயாரித்திருக்க முடியும். தயாரித்த புள்ளிகளைக்கொண்டும், பல வர்ணங்களுடைய படங்களைக் கொண்டும், உட்கார்ந்த இடத்தில் ஒரு திட்டத்தை தயாரிப்பதென்பது முடியாத காரியம். அதுவும் நமது இந்தியாவில் எந்த திட்டத்தையும் அவ்வளவு எளிதாக செய்து விட முடியாது.

எப்படி யிருப்பினும் திட்டங்கள் முனிசிபாலிடிகள் இருக்குமிடங்களில் தயாரித்து ஆய்விட்டன. அப்படி தயாரித்த அளவில் யேதோ 100-க்கு 5-பாடசாலைகள் மிகச் சிறியவையாயும், உபயோகமற்றதாயும் உள்ள பாடசாலைகளை தள்ளிவிடப்பட்டதாக வதந்தி. சில பாடசாலைகளில் ஒரு வகுப்பில் 5-பிள்ளைகளும், 10-பிள்ளைகளும், இருக்கும்படியான வகுப்புக்களை எடுத்து விடும்படி டைரக்டர் சிபார்சு செய்திருப்பதாகவும் தெரிகிறது. அப்படி இது அமுலுக்கு வரப்போவதாயிருந்தால், இதை கவர்ன்மெண்டார் தங்கள் சிபார்சுடன் ஜில்லாக் கல்விச் சபைகளுக்கு அனுப்புவார்களாம். அதன் பிறகு கல்விச் சபைகள் என்ன செய்யுமோ தெரியவில்லை. ஒரு சமயம்

அத்திட்டம் கல்விச் சபைக்கு வரத்தவரினால் பாதிக்கப் படும் பாடசாலைகளுக்கு ஆக்டில் கண்டபடி அப்பீல் செய்துக்கொள்ள இடமுண்டு.

திரு. P. V. கிருஷ்ணய்ய சௌத்திரி M. L. C. அவர்கள் சென்ற வாரம் கவர்ன்மெண்டுக்கு சென்னை இராஜதானியில் ஆரம்பக்கல்வி தீவிரமாக மக்களுக்கு பரவ எண்ண மிருப்பின், ஆரம்பாசிரியர்கள் சம்பளங்களை முதலில் உயர்த்தவேண்டும், (Grant in aid Code) எய்டட் பாடசாலைகளில் கிராண்டுத் துகைகளை ஆசிரியர்களுக்கு அதிகப்படுத்திக்கொடுக்க அரசாங்கம் முன் வரவேண்டும், அவ்விதம் பணம் சிலவழிக்க முன்வர முடியாவிடில் இந்த சாம்பியன் ஸ்கீம் முதலிய அனாவசியமான திட்டங்களை கவர்ன்மென்டார் இருக்குமிடம் தெரியாமல் புதைக்கவேண்டுமென்பதாக, ஓர் அறிக்கையைத் தயாரித்து கவர்ன்மெண்டுக்கு அனுப்பியிருக்கிறார். இதுவு, மன்றியில் அவர் வரப்போகும் சட்டசபை பட்ஜட் ஸெஷனில் ஆரம்பக் கல்விக்கென ரூ. 25,00000 அதிகப் படுத்தவேண்டுமென்ற ஓர் தீர்மானத்தையும் கொடுத்திருக்கின்றார். இப்பெரியார் போன்று சட்டசபைகளில் அங்கத்தினர்கள் குறைந்தது 10-பேர்களாவது ஆரம்பக் கல்வி விஷயத்தில் ஊக்கம் கொள்வார்களாகில், ஆரம்பக்கல்வியும் சீக்கிரம் அபிவிருத்தி யடைவதுடன், ஆரம்பாசிரியர்களும் முன்னேற்ற மடைந்து பல வகையிலும் கல்வித்துறையில் உழைக்க உத்சாகம் கொள்வார்கள் என்பதில் என்ன சந்தேகம். திரு. P. V. கிருஷ்ணய்ய சௌத்திரியாரவர்களை நாம் நேரில் இன்னும் பார்க்க சந்தர்ப்பம் வாய்க்காவிடினும், அவர் ஆரம்பக் கல்விக்கென செய்துவரும் தொண்டைப் பாராட்டி ஆரம்பக் கல்வி யுலகில்வாழும் மக்களின் சார்பாக, அன்னார்க்கு இப்பத்திரிகையின் மூலம் எமது மனமார்ந்த வந்தனத்தை அளிக்க கடமைப்பட்டிருக்கின்றோம்.

# முதியோர் கல்வி

## (மன்னார்குடி கௌமார குருகுலம் செய்யும் அறியத் தொண்டு)

எல்லா செல்வங்களிலும் கல்விச் செல்வமே சாலச் சிறந்ததென பெருந்தகையார் பலர் கூறியிருந்தும், நம் நாட்டில் கல்வி கற்றோர் நூற்றுக்கு 10-பேர்தான் படித்தவராக காணப்படுகின்றனர். அதற்குக் காரணம், பொதுஜன ஊக்கம் ஒரு சிறிதும், அரசாங்கத்தாரின் அசிரத்தையுமே. ஆரம்பக்கல்வி மாணவர்களுக்கே உரியதெனவாளாயிருந்தால் பிற நாடுகளைப்போல் 100-க்கு 80 அல்லது 90 படித்தவர்களென ஒருகாலும் கணக்கிடமுடியாது. முதியோர் கல்வி மிக அவசியம் கவனிக்கப்படவேண்டும். துகிலில்லாமலும், சிறு கோமணம் கட்டிக்கொண்டு, உண்ண உணவின்றி பாதவிக்கும் பாலர் பலர் கிராமங்கள் தோறும் உழல்கின்றனர். பஞ்சுபோல் அலையும் பாலரை கவனிப்போர் யாருமிலர். பசி வந்தக்கால் பத்தும் பறந்துபோம் என்பதற்கிணங்க பாலர்களுக்கோ அவ்விதமிருப்பின் முதியோர்பாடு எவ்வாறு திண்டாடும். இத்தகைய நிலையில் கல்வியை பாலர்க்கு ஊட்டுவதென்பது மகாகடினமே. முதியோர்கள் கல்வியின் அருமை தெரிந்தாலல்லது தங்கள் குழவிகளை பள்ளிக்கு அனுப்பார். முதியோருக்கு கல்வியை போதிப்பதால் இரண்டுவித அனுகூலங்கள் உண்டு. முதியோர்கள் கல்வி அறிவுபெற்று படித்தவர் எண்ணிக்கையை உயர்த்துவதுடன், தம் பிள்ளைகளுக்கும் பள்ளிக்கு அனுப்பி கல்வியை பரவும்படி செய்வார்கள். சென்ற 80 ஆண்டுகளாக அரசாங்கத்தார் கல்விக்கென ஆங்காங்கே பல பற்கலை கழகங்களை நிரவி ஏராளமான பொருள்களை செலவழிக்கின்றனர். அதனால் படித்தவர்கள் எண்ணிக்கை உயர்வதற்கு பதிலாக படித்தவர்களிடையே வேலையற்றோர் எண்ணிக்கை உயர்கிறது.

எனவே மக்கள் பள்ளிக்கு சென்று கல்வி கற்றாலே கல்வி என்று எண்ணுதல் கூடாது. பல பொது விஷயங்களை மக்கள் அறியும்படி நல்ல விஷய ஞானிகளைகொண்டு சொற்பொழிவுகள் செய்தோ, படங்கள் ரூபமாகவோ, இன்னும் மற்றவகைகளினால் ஆற்றலுரும்படி செய்வதே சாலச்சிறந்ததாகும். உதாரணமாக முதியோர் கல்விக்கென மன்னார்குடியில் கௌமார குருகுலம் என்ற

# ஆரம்பாசிரியன் அரங்கநாதன்

(நித்யகல்யாணி. மதுரை)

ஆ என் தலைவிதியே, வழியற்றவனுக்கு வாத்தியார் வேலை போதும்! நான் படித்த படிப்பென்ன, எண்ணின எண்ணங்களென்ன! இன்னும் 2 வருடங்கள் கஷ்டப்பட்டு படித்து B. A. பட்டம் பெற்றிருந்தால் I. C. S. பரிட்சைக்குச் சென்று இதுபரியந்தம் ஒரு டிப்டி கலெக்டராகவாவது இருந்திருப்பேன். அல்லது B. L. பரீட்சையில் தேர்ந்திருந்தால் லாயராகச் சென்று குறைந்தது மாதம் ரூபா 200 சுலபமாக சம்பாதித்திருப்பேன்! ஒவ்வொரு வகுப்பிலும் முதன்மையாக நின்று பெற்ற பரிசுகளும், பத்திரங்களும், பதக்கங்களும், இப்பொழுது எனக்கு என்ன பயனையளிக்கும். சில நிமிஷத்தில் என் வாழ்நாளை வீண் நாளாக ஆக்கிக்கொண்டேனே. எப்படியோ என்மனதை இச் சண்டாளி மரகதம் என் மனதைக் கெடுத்துவிட்டாளே. செங்கனூர் ஜமீன்தார் மகள் மனோண்மணியை கன்னிகாதானமாக விவாகம் செய்வித்து, சுமார் பதினாயிரம் ரூபாய் வர தட்சணை கொடுப்பதாக சொன்னார்களே, அவளையாவது மணந்தேனா அல்லது நமது ஜில்லா மாஜிஸ்டிரேட் யேக புத்திரி டாக்டர் லலிதாவையாவது மணந்தேனா, அவள் உடுக்கும் உடையும் நடக்கும் நடையும் எவரைதான்

---

ஸ்தாபனம் சென்ற இரண்டு ஆண்டுகளாக கிராமங்களில் அரிய சேவைசெய்திருப்பதை யாரும் புகழாமல் இருக்கமுடியாது. அத்தகைய ஸ்தாபனத்தார் பல கிளை ஸ்தாபனங்களை பல விடங்களில் நிறவி ஆங்காங்கே இலவசமாக பல புத்தகங்களைகொடுத்து படிக்கச் செய்தல், கோடை பள்ளிக்கூடங்களென நியமித்து அறிஞர்களால் பல சொற்பொழிவு செய்வித்தும், மனிதர்கள் எளிதில் அறியக்கூடியவாறு நிழல்படக்காக்ஷிகள் மூலமாய், விஷயங்களை முதியோர்களுக்கு உணர்த்தியும், இன்னும் மற்றும் பல அரிய தொண்டுகள் செய்திருப்பதைக்கண்டு மகிழ்கின்றோம்.

அம்மாதிரி கழகங்கள் ஆயிரக்கணக்காக தாலுக்காதோரும் ஏற்படுத்தி வேலைசெய்து வருவார்களானால் வெகு சீக்கிரம் படித்தவர் எண்ணிக்கை உயர்வதுடன் ஆரம்பக் கல்வியை சிறுவர்களுக்கு பரப்புவதற்கு ஓர் பெருநிதியாயும் நிற்கும்.



கவரச்செய்யாது? இப்பொழுது அவள் சுமார் மாதம் ரூபா 300 பெற்று கவர்ன்மென்ட் ஸர்ஜனாகவல்லவோ இருக்கின்றாள். எத்தனையோ தரம் என்னையவள் தனித்து மணம் செய்துக்கொள்ளும்படி வாதாடி, ஒரு முத்தம் கொடுக்கும்படி மன்றாடினாளே அம்முத்தம் கொடுக்கும் பாக்கியத்தையாவது அடைந்தேனா. சொந்தம் சொந்தமென்று இக்கிழப் பிணங்களின் பேச்சைக்கேட்டு மாமன் மகளாகிய மரகதத்தைக் கட்டிக்கொண்டு என்ன சுகம் அனுபவித்தேன். இச்சண்டாளியால் நமது கல்வியும் நின்றது கையிலிருந்த காசும் ஒழிந்தது. நமது வாழ்நாளில் அனுபவிக்கவேண்டிய இன்பங்களும் தொலைந்தன. இச் சண்டாளி மரகதத்தின் முகத்தில் இனி ஒரு தரமும் முழிக்கக்கூடாது. என்று பலவாறு சிந்தித்த வண்ணமாய் “பொன்னிலயம்” என்ற ஒரு அழகிய பங்களாவின் பின்புறத்தில் அடர்ந்த மரங்கள் சூழ்ந்த ஓர் கிணற்றின் அருகில், சுமார் 25-வயதுள்ள ஓர் யவ்வன வாலிபன் அங்கு கிடந்துள்ள ஓர் பாறையின்மீது உட்கார்ந்திருந்தான்.

அப்பொழுது சுமார் 75 வயதுள்ள ஒரு பாட்டியம்மாள் கூன் வளைந்து தள்ளாடி தள்ளாடி தன் கையில் ஒரு வெள்ளிக் கோப்பையில் நிரைய காப்பித்தண்ணீரை கையிலேந்தினவளாய், அடே ரங்கநாதா இங்கேயேன் உட்கார்ந்திருக்கின்றாய்? உன்னைப் பொன்னிலயம் முழுதும் தேடிவிட்டேனே. ஏனடா இந்தப்பனியில் இங்கு உட்கார்ந்திருக்கின்றாய். பாடசாலைக்கு மணியாகவில்லையா என்ன? உனது பரமசிஷியன் பக்கிரிசாமி பாடசாலை திறக்க அப்பொழுதே சாவியை வாங்கிக்கொண்டு போய்விட்டானே. நீ யெப்பொழுது பாடசாலைக்குப்போவது.?

அரங்கநாதன் :—சநியனே நீயும் வந்துவிட்டாயா பொழுது விடிந்ததும், வீட்டிலிருந்தால் உன் தொல்லை பாடசாலைக்குப்போனால் பிள்ளைகள் தொல்லை, எந்தத் தொல்லைக்கு நான் தலைகொடுப்பது.

பாட்டியம்மாள் :—எதற்கடா இன்று இவ்விதம் பேசுகின்றாய், தற்போது உனக்குக் கிடைத்திருக்கும் வேலையில் உனக்கென்ன கஷ்டம். நீயே ராஜா, நீயே மந்திரி. கொஞ்சநேரம் சிரமப்பட்டு பிள்ளைகளுக்கு பாடம் சொல்லிவிட்டால் உன் வேலைமுடிந்தது. உலகத்திலுள்ள தொழில்களுக்கெல்லாம் மேலான ஆரம்பாசிரியர் தொழிலல்லவா உனக்கு கிடைத்திருக்கிறது. பணம் அதிகம் கிடைக்கா

விட்டாலும் எவ்வளவு மதிப்பு, எவ்வளவு பெரிய மனிதர்கள் சிநேகம், குரு முறையில் எவ்வளவு மரியாதை, இந்த கிராமத்தில் நம் வீட்டிற்கே ஒரு மதிப்பல்லவா? எழுந்திரு உனக்கு அனுபவம் போதாது. இந்தக் காபியைக்குடித்துவிட்டு சீக்கிரம் பாடசாலைக்குச் செல்.

அரங்கநாதன்:—பாட்டி போதும், போதும், உங்கள் உபந்நியாசம். நான் கெட்டதெல்லாம் உங்களால்தான், சொந்தமென்று மரகதத்தை என் தலையில் கட்டினீர்களே நான் என்ன சுகம் அனுபவிக்கின்றேன். உங்களுக்காவது அவளால் ஒரு சுகம் உண்டா அதுவும் கிடையாது. அதிருக்கட்டும் பார்த்து, பார்த்து இந்த வாத்தியார் வேலையை தேடிவைத்தீர்களே! நரகவேதனைதான், யாராவது பூர்வீகத்தில் பாவம் செய்திருந்தால்தான் இந்த வேலை அவர்களுக்குக் கிடைக்கும். இந்தப் பிரமாதமான வேலைக்கு எத்தனை சிபார்சு எத்தனை சன்மானம் இவ்வளவு செய்தும் என்ன லாபம். வருஷம் 8 ஆகியும் அந்த ரூ 22-8-0 ல் தான் இருக்கின்றேன். சம்பளம் தான் இந்தகதியென்றாலோ, ஊரார்தொல்லை மற்றொன்று. பிள்ளைகளாவது ஒழுங்காக நடந்துகொள்ளுகின்றார்களா அதுவும் கிடையாது. ஒருவன் 9-மணிக்கு வருகிறான். மற்றொருவன் பாதி பாடம் முடிந்து வருகிறான். மற்றொருவன் பிள்ளைகளை வீட்டிற்கு விடும் போது வருகிறான். தவரிகேட்டால் தாய்தந்தையர்கள் சிபார்சு சில பிள்ளைகள் செய்யும் துஷ்டத்தனமோ சவுக்கையெடுத்து பிச்சினாலும் பாதகமில்லை. சில சமயங்களில் தாய்தந்தையர்களே முரட்டுத்தனமாக அடித்து இரத்தம் வரும்படி அடித்துவிடுகிறார்கள். நாம் பிரம்பினால் தொட்டோமோ, அப்பொழுதே நமக்கு பிடித்தது சனியன். பிடிஷன்கள் ஒரு பக்கம் கிளம்புகிறது. தாய்தந்தையர்கள் ஒரு பக்கம் மிரட்டுகிறார்கள். பிள்ளைகளுக்காக உபாத்தியாயரா உபாத்தியாயருக்காக பிள்ளைகளா வென்பதுதான் எனக்கு விளங்கவில்லை. இந்த உபாத்தியாயர் வேலை செய்வதைவிட கைவண்டியிழுத்து கால்வயரு சாப்பிட்டாலும் சுகமுண்டு. பாருங்கள் பாட்டி நேற்று என் வகுப்பில் சுமார் 12 பிள்ளைகள் பல் விளக்காமல், முகங் கழுவாமல்,பாடங்களை எழுதாமல், படிக்காமல் வந்திருக்கிறார்கள். இவர்களை வைத்துக்கொண்டு நான் என்செய்வது. அவர்களை நன்



றாக பிரம்பினால் கண்டித்துவிடுவதா, முத்தம் கொடுப்பதா சொல்லுங்கள். இந்த உபாத்தியாயர் வேலையே யெனக்கு வேண்டாமப்பா.

இவ்விதம் பாட்டியும், பேரனும் சம்பாஷித்துக்கொண்டிருக்கையில் சுமார் 16 வயதுள்ள ஓர் பெண்மணி இடுப்பில் ஓர் குடமும், வலது கரத்தில் தாம்புக் கயிரையும் ஏந்தியவளாய் மெல்லன, வாட்டமுள்ள முகத்துடன் கிணற்றை நோக்கி வந்துக்கொண்டிருந்தாள். இதைக்கண்ட அப்பாட்டி அடே அரங்கநாதா சின்னஞ்சிறு பாலர்கள் மீது இவ்வளவு குற்றம் சுமத்தினாயே அவர்களுக்கென்னடா தெரியும். அவர்கள் பால்மணம் மாறாத குழவிகள் பெற்றவளுக்குத் தெரியும் பிள்ளையின் அருமை. நீயுங்கூடத்தான் சிறு வயதில் இப்படி யெல்லாம் விளையாடினவன் எத்தனைதரம் நானே உன்னை அடித்து பாடசாலைக்கு அழைத்துப்போயிருக்கின்றேன் உனக்கு ஞாபக மிருக்கின்றதா? இதோ பார் மாத்தின்மேலிருந்து விழுந்ததால் உன் நெற்றியில் காயம்.

சிறுவயதில் பிள்ளைகள் அப்படித்தான். அதிருக்கட்டும் இதோ பார்த்தனையா, மூதேவியை, காலையில் எழுந்திருப்பது துரைசாணியம்மாள் 8-மணி, ஒய்யார நடையோடு கிணற்றுக்குவருவது 9-மணி ஒரு குடம் தண்ணி கொண்டுவருவதற்கு மணி 10-ஆய்விடுகிறது, இவளுக்கு எந்த வாத்தியாரையடா வைப்பது. இதைக்கேட்டரங்கநாதன் அளவிலா கோபம் கொண்டவனாய் தன் கையில் வைத்திருந்த வெள்ளிக் கோப்பையை காப்பியுடன் மரகதத்தின் முகத்தின் சரியாக ஓங்கி வீசி யெறிந்தான். இக்கோப்பை முகத்தின்மீது வீழ்ந்தவேகம் புருவத்தின் மேல் புறத்தில் சற்று காயம் கண்டு இரத்தம் வடிய ஆரம்பித்தது. மற்றொரு புறம் தான் அணிந்திருந்த வெள்ளை ஜாக்கெட் இடது புறம் முழுதும் நனைந்தது. தான் அணிந்திருந்த வெண்புடவை முழுதும் காப்பியும், ரத்தமும் தெரித்திருந்தன. எரிந்த கோப்பையும் கிணற்றில் விழுந்துவிட்டது. யென்செய்வாள் மரகதம், ஈசா இதுவும் நின்கருணையோ. யான் செய்துவந்த பூஜைகளின் பலனோ? கலியாணமே வேண்டாமென்று உருதியாக மணதில் எண்ணினேனே, எண்ணினது மாத்திரமல்லாமல், மணந்த என் சிநேகிதிகளையெல்லாம் கேலி செய்து வந்தேனே. நமது கலாசாலையில் ஆண் ஆசிரியர்கள்

கிட்டே நெருங்கவும், அஞ்சுவார்களே, அல்லியைப்போலல்லவோ, அரசாண்டுவந்தேன். அடிக்கடி மாதர் சங்கங்களில் ஆண்களுக்கு பெண்கள் அடிமையல்லவென்று, பல ஆதாரங்களைக்கொண்டு நிரூபித்து வந்தேனே. ரஷியாவைப்போலவும், ஜப்பானைப்போலவும், பெண்கள், சுவதந்தரத்தோடு சுகமாக வாழவேண்டுமென்று பிரசங்கித்து வந்தேனே. சகோதரி சாரதாவைப்போலவாவது, ஓர் உபாத்தினித் தொழிலையாவது கைக்கொண்டேனா, லலிதாவைப் போல் ஓர் வைத்தியத் தொழிலிலாவது சேர்ந்தேனா, பூனாவிலுள்ள சேவசாதன் முதலிய கன்னிகா பெண்களுக்கென ஏற்படுத்தியிருக்கும், மடங்களில் சேர்ந்து, சமூகத்தொண்டாவது செய்தேனா, அல்லது தேசிய இயக்கத்தில் சேர்ந்து தேசத் தொண்டாவது புரிந்தேனா. என்ன அறிவற்றவேலை செய்துவிட்டோம். பெண் புத்தி பின் புத்தி என்கிறார்களே அது உண்மையாக அல்லவோ நமக்கு முடிந்தது. அத்தைப் பிள்ளையாகிய அரங்கநாதனை விவாகம் செய்துகொண்டோமே, நமக்கு சுகமில்லாமல் போனாலும் போகிறது, நமது கனவர்தான் என்ன நம்மால் சுகப்பட்டார். ஒரு சமயம் மணிமங்கலம் மைனர் நாம் பாடசாலைக்கு போகும் பொழுது வரும்பொழுதெல்லாம், மோட்டார் வைத்துக்கொண்டு நான் பார்த்தால் போதும், பேசினால் போதுமென்று அல்லும் பகலும் அவஸ்த்தைப்பட்டுக்கொண்டிருந்தாரே அவரை கலியாணம் செய்துகொண்டிருந்தால், நாம் ஆளும் அம்புடன், வேலைக்கொரு உடையுடன் ரதியைப்போல் இருந்திருப்போமல்லவா? இல்லை அவ்விதம் எண்ணுவதும் தவறு. சிறு வயதிலிருந்து, ஒரு கிண்ணத்தில் சாப்பிட்டு, ஒரு படுக்கையில் படுத்து, ஒரு பாடசாலையில் வாசித்து ஒரே வீட்டில் ஆடிப்பாடின என் சொந்த அத்தைக் குமாரர் அவரே என்னை காதலிக்க பிரியப்படவில்லையானால், என்னை அன்னியர் காதலித்து எனக்கு சுகம் தந்திருப்பார்களென்பதில் உண்மையே கிடையாது. இந்த வீண் எண்ணங்களெல்லாம் கானலில்கண்ட ஜலமாகும்.

சரி இப்பொழுது நமது கதியென்ன. நம் தாய் தந்தையர் சொற்படி மணந்த அரங்கநாதனால் நமக்கு வாழ் நாளில் ஒரு வித இன்பமும் கிடையாது. இது பரியந்தம் நம்மால் நமது கணவருக்கு மனைவி முறையிலல்லாது சகோதர வாஞ்சையிலாவது வீட்டு

# கனம் பிரதம மந்திரியார் பொப்பிலி இராஜா அவர்கள் சொற்பொழிவு

## ஆரம்பாசியர்களுக்கு சம்பளம் அதிகப்படுத்தப் பட்டிருக்கிறதாம்

கடந்த நவம்பர் மாதம் 30-ம்தேதி கனம் பிரத மந்திரியார் பொப்பிலி இராஜா அவர்கள் நெல்லூர் விஜயம் செய்தபோது பல வரவேற்புப் பத்திரங்கள் வாசிக்கப்பட்டன. அவைகளுக்கு பதிலளிக்கையில் ஆரம்பக்கல்வியைப்பற்றி சில வார்த்தைகள் சொல்லினார்.

அதாவது " தற்போது சாம்பியன் ஸ்கீமைப்பற்றி, போர்ட் பாடசாலை அதிகாரிகளுக்கும், எய்டட் பாடசாலை மானேஜர்களுக்கும், அதிக அபிப்பிராய பேதம் ஏற்பட்டிருப்பதாக தெரிகிறது. அரசாங்கத்தின் நோக்கும் தற்போதிருக்கும் பாடசாலைகளை பாதிக்கும் வண்ணம் இப்புதிய திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவர வேண்டுமென்பதல்ல. பாடசாலை யென்று சேர்க்கத்தகாத அவ்வளவு குறைவான பிள்ளைகளுடைய பாடசாலைகளை தலைத்துவிட்டு இருக்கவேண்டிய பாடசாலைகளுக்கு அதிக பொருளுதவி செய்து அப்பாடசாலைகளை நன்றாக விருத்தி செய்யவேண்டுமென்பது அரசாங்கத்தின் நோக்கம். தற்போது அனாவசியமாக செலவழிந்து வரும் பயனற்ற செலவை ஓர் அளவு நிருத்தவேண்டுமென்பது.

* * * *

---

விஷயங்களில் உதவி செய்து வந்துகொண்டிருப்பதாக நினைத்துக் கொண்டிருந்தோம். தற்போது நம் நெற்றியில் ஏற்பட்டிருக்கும் குறி நம்மால் அவருக்கு சங்கடமே யொழிய சுகமில்லை யென்பதை நன்றாக விளக்குகின்றது. இனி எதற்காக, எவர்க்காக இவ்வுடலை இவ்வுலகத்தில் நான் வைத்திருப்பது. இவ்வுடல் இவர் கண் முன்னின்று எப்பொழுதும் மறைந்து விடுமானால் என் கணவராவது ஒரு சமயம் தனக்கிசைந்த பெண்மணியை மணந்து சுகமாக உலகில் வாழக் கூடும். இதோ மறைந்து விடுகின்றேன். என்று எண்ணினவளாய் கண்களில் முத்துகளைப்போல் கண்ணீர்வடிய திடீரென மாகதம் குதித்து கிணற்றில் வீழ்ந்துவிட்டாள்.

(தொடரும்)

தற்போது சில ஆரம்பாசிரியர்கள் பெரும் சம்பளம் ஒரு பியூன், டபேதார்கள் வாங்கும் சம்பளங்களைக் காட்டிலும் குறைந்து வாங்குகின்றார்களென்பது அரசாங்கத்திற்குத் தெரியும். ஆரம்பாசிரியர்கள் பொருளாதார நிலையும், செல்வாக்கும் ஓர் அளவு உயர்த்தப்பட்டாலல்லது ஆரம்பக்கல்வி நமது நாட்டில் விருத்தியடைய இடமில்லையென்பதை நன்றாக அரசாங்கம் அறியும், ஆதலினால்தான் தற்போது அரசாங்கம் ஆரம்பாசிரியர்களின் சம்பளங்களை உயர்த்தி ஓர் புதிய சம்பளத் திட்டத்தை தயாரித்து எல்லா லோகல் போர்ட் பாடசாலைகளை அனுசரிக்கும்படி உத்திரவிட்டிருக்கிறது. இதைப்பற்றி எந்தச் சங்கமும், பத்திரிகைகளும் அரசாங்கம் செய்த காரியத்தை புகழ்ந்து வருவதாக தெரியவில்லை. அதற்கு மாறாக அரசாங்கம் ஆசிரியர்களுக்கு சம்பளங்கள் குறைத்து விட்டதென்பதான கிளர்ச்சிகள் நடந்து வருகின்றன.

தற்போது ஆசிரியர்களின் (Secondary, Elementary Teachers) சம்பளக் கணக்கை பரிசோதித்துப் பார்த்தால் சுமார் 5-லட்சம் ரூபாய் அரசாங்கம் இவ்வருடம் அதிகப்படியாக சிலவு செய்ய வேண்டியிருக்கின்றது " என்பதாக பேசினார்.

ஆரம்பாசிரியர்களைப்பற்றி அரசாங்கம் சற்று சிரத்தையுடன் கவனித்து வருவதைப்பற்றி நமது வந்தனத்தை நாம் அரசாங்கத்திற்கு அளிக்க கடமைப்பட்டிருக்கின்றோம். அரசாங்கம் ஆரம்பாசிரியர்களுக்கு என்ன சம்பளம் உயர்த்திவிட்டது, அதற்கு என்ன ஆரம்பாசிரியர்கள் நன்றி காட்டவில்லையென்றுதான் நாம் தாழ்மையுடன் கேட்கின்றோம். இதர நாடுகளை ஒத்திட்டு பார்க்கின்றபொழுது, பத்தில் ஒரு பங்கு நமது ஆசிரியர்களின் சம்பளமில்லை. அதற்கு நமது பொப்பிலி ராஜா அவர்கள் நமது நாடு வறுமை நாடு என்கின்றார். மந்திரிகளின் சம்பளங்களை யேன் 4000-ரூபாயிலிருந்து 1000-க்கு குறைத்துக்கொள்ளக்கூடாது. காந்தி, மகான் சொல்லுகிறபடி ரூபா 1000, 2000, சம்பளம் வாங்கும் அரசாங்க அதிகாரிகள் ரூபா 500-ஆக ஏன் கவர்ன்மெண்டார் குறைக்கக் கூடாது. இதர நாடுகளிலுள்ள அரசாங்க அதிகாரிகளை ஒத்திட்டுப் பார்த்தால், நமது நாட்டிலுள்ள அதிகாரிகள் ஒன்றுக்கு நான்காக அல்லவா பொது மக்களின் பணத்தை சாப்பிட்டு ஜீவணித்து வருகிறார்கள். இந்த விஷயத்தில் இந்தியா நாடு ஏழ்மை நாடா, பணக்



கார நாடா வென்றுதான் கேட்கின்றோம். ஆசிரியர்களைக் கண்டால் இந்தியா நாடு ஏழை நாடாக மாறிவிடுகிறதுபோலும். உதாரணமாக புதுச்சேரி கவர்னரின் சம்பளத்தையும், சென்னை கவர்னரின் சம்பளத்தையும், ஒத்திட்டுப் பார்த்தால் உண்மை விளங்கும். கனம் மந்திரியாரவர்களின் சம்பளத்திற்கு பாதிக்குக் குறைவாகத் தான் புதுவையின் கவர்னருக்கு சம்பளம் இருப்பதாக தெரிகிறது. இதைப்பற்றி இன்னும் எழுதவேண்டுமென்றால் எத்தனை நாட்கள் வேண்டுமானாலும் எழுதலாம். இது விஷயம் நம்மைச் சார்ந்ததல்ல இதைப்பற்றி பேசவேண்டியது பொது மக்களின் ஓட்டுரிமையைப்பெற்று சட்டசபைகளுக்குக் அலங்காரமாகச் செல்லும் கனவான்களின் வேலை. தேச முன்னேற்றத்திற்காக ஆசிரியர்கள் உழைக்கவேண்டும், கல்வியைப் பறப்பவேண்டும், மக்களுக்கு அறிவு ஊட்டவேண்டும், பெரிய மனிதர்களாகச் செய்யவேண்டும் ஆனால் அவர்களுக்கு சம்பளம் மாத்திரம் ஒரு சாதாரண குமஸ்தாவைக் காட்டிலும் குறைவாக கொடுக்கவேண்டும். இது என்ன நியாயம் யென்றுதான் கேட்கின்றோம்.

ஓர் ஆசிரியனுக்கு தாய் தந்தையர்கள் இறந்து விட்டார்களென்று எண்ணுவோம், சகோதரன், சகோதரிகள், பிறக்கவில்லையென்றே வைத்துக்கொள்ளுவோம், பிள்ளைகள் பிறக்கவில்லையென்றே வைத்துக்கொள்ளுவோம், கேவலம், ஒரு ஆசிரியனும் அவரது மனைவியும், தங்கள் உடலில் உயிரை வைத்து இவ்வுலகில் மனிதர்களாக உயிர் வாழ்வதற்கு குறைந்தது பட்டிணங்களில் மாதம் ரூபா 35-ம் கிராமந்திரங்களில் ரூபா 25-தாவது முதல் முதலில் ஆரம்பிக்கப்பட வேண்டாமா? எந்த மகா நாட்டைப் பார்த்தாலும் ஆசிரியர்கள் பொருப்பு பிரம்மாவின் பொருப்பைக் காட்டிலும் பெரிது, அதைச் செய்யவேண்டும், இதைச் செய்ய வேண்டும், ஆனால் சம்பளம் விஷயத்தில் மாத்திரம் யாருக்கும் அக்கரைக் கிடையாது. ஆதலின் ஆரம்ப ஆசிரியர்கள் ஆங்காங்கு கூட்டங்களைக் கூட்டி, பத்திரிகையின் மூலமாக பல விஷயங்களைத் தெரிந்து தங்களையும், ஓர் அளவு சீர்திருத்திக்கொண்டு அவ்வப்பொழுது மகா நாடுகளைக் கூட்டி தமது குறைகளை அரசாங்கத்திற்கும், அதிகாரிகளுக்கும் அடிக்கடி தெரிவித்து வருவார்களானால், வெகு சீக்கிரத்தில் ஆரம்பாசிரியர்கள் பல வகையிலும் முன்னேற்ற

# ஆசிரிய மானேஜர் சகோதரர்களுக்கு ஓர் அறிவிப்பு

நமது நாட்டில் ஓர் அளவு ஆரம்பக் கல்வியை வளர்த்தும் காத்தும், வருபவர்கள் நமது ஆரம்ப ஆசிரிய மானேஜர்களே உண்மைக் கூறுமிடத்து நமது இராஜதானியிலுள்ள ஏறக்குறைய 50000-பாடசாலைகளில் 30000-பாடசாலைகள் எய்டட் பாடசாலைகளில் அதில் சுமார் 20000-பாடசாலைகள் ஆரம்பாசிரிய சகோதரர்களால் நடத்தப்பட்டுவருகின்றன. ஆதலின் நமக்கு ஆரம்பக்கல்வி ஆட்சியில் ஏறக் குறைய எல்லா வகைகளிலும், ஆதிக்கமும் செல்வாக்கும் நமக்கு பாதி இருக்கவேண்டியதென்பதில் சந்தேகமில்லை. ஆனால் நாம் எந்த நிலையில் நாம் வாழ்க்கையை தற்போது நடத்தி வருகிறோம் என்று சற்று யோசிப்பின் ஒவ்வொரு ஆசிரிய மானேஜர்களின் மனமும் வருந்தாமலிராது. கல்வி யதிகாரிகளில் சிலர் இவர்கள் பாடசாலையை வைத்துக்கொண்டு பணம் பறிக்கின்றார்கள் என்பவர்களும், பிழைக்க வழியின்று இத்தொழிலை கைக்கொண்டார்கள் என்று நினைக்கும் சில பாமர மக்களும், அறிவிலிகள் என்றும், ஒன்றும் தெரியாத பாமரர்களென்றும் நினைத்து வரும் சில பொதுஜன ஊழியர்களும் நம்மைப் படுத்தும்பாடு எழுத்தில் அடங்காது. இதற்கெல்லாம் காரணமென்ன, யார் மீது குற்றம் சாற்றுவது. அரசாங்கத்தின் மீதா, கல்வி யதிகாரிகளின் மீதா, பொது ஜனங்களின் மீதா, இல்லை, இல்லை நாமே நமது தாழ்மைக்கும் வறுமைக்கும், ஆரம்பக்கல்வி க்ஷீணித்து வருவதற்கும், தேசியக் கல்வி மங்கிக் கிடப்பதற்கும் காரணம். ஓரளவு, நாம் அரசாங்கத்திற்கும், கல்வி யதிகாரிகளுக்கும் நமது மனமார்ந்த வந்தனத்தை யளிக்க கடமைப்பட்டிருக்கின்றோம். யேனெனில் தமது கூட்டத்தாரை யவர்கள் ஒழித்து விடவோ, நசுக்கிவிடவோ எண்ணங் கொண்டவர்கள் அல்ல சில ஆசிரிய மானேஜர்கள் அவ்விதம் எண்ணி வருவதும் பிசகு நாம் எவ்வளவு கல்வி யிலாகாவைப் பற்றியும் கல்வியைப் பற்றியும் தெரிந்து வைத்துக்கொண்டிருக்கின்

---

மடைவார்கள் என்பதில் ஐயமில்லை. இவ்விதம் பல விஷயங்களை ஆராயும் பொழுது ஆரம்பாசிரியர்கள் சம்பளம் என்ன உயர்ந்திருக்கிறதென்பதை வாசகர்களே அறிந்து கொள்ளுங்கள்.



றேமோ அந்த அளவுதான் ஆசிரிய மானேஜர்களைப்பற்றி அதிகாரிகளும் அரசாங்கமும், தெரிந்துக்கொண்டிருக்கின்றன. போலீஸ் காரனைக்கண்டு பிள்ளைகள் ஓடும் நிலைமையில் ஆசிரிய மானேஜர்கள் இருக்கின்றார்கள். அதேக சிறுவன் வயது செல்லச்செல்ல அப் போலீஸ்காரனைப்பற்றிய அனுபவங்களை தெரிந்ததும் அவன் தோள் மீதிலேயே கையைப் போட்டுச் செல்லுகின்றான். வேஷத்தில் மயங்கக்கூடாது அவரவர்கள் கடமையையும், பலத்தையும், அவரவர்கள் முதலில் தெரிந்துகொள்ளவேண்டும்.

டிப்டி இன்ஸ்பெக்டர்கள், ஜில்லாக் கல்வி யதிகாரிகள் டைரக்டர் துரையவர்கள் ஜில்லாக் கல்வி சபைகள் அரசாங்கம் முதலியனவற்றின் அதிகாரங்களை ஒவ்வொரு ஆசிரிய மானேஜர்கள் நன்றாக அறிந்துகொள்ளவேண்டும். எவ்வாறு அறிந்துகொள்ள முடியும். பத்திரிகைகளை கையிலும் தொடாமலா? சங்கங்களில் சேராமலா? மகா நாடுகளைக் கூட்டாமலா? நமது ஆசிரிய மானேஜர்கள் தமது ரேஞ்சு சங்கங்களை நன்றாக வளர்த்து ஆங்காங்கு மகா நாடுகளைக் கூட்டி, பல அறிஞர்களையும், அதிகாரிகளையும் வரவழைத்து தமது குறைகளையும் குறைபாடுகளையும் கல்வி மந்திரியின் செவிக்கு எட்டச்செய்து நமக்கு வேண்டிய காரியங்களைச் செய்யும்படி நெருங்கி வாதாடினாலல்லது ஆசிரிய மானேஜர்கள் கரையேற வழி கிடையாது. தற்போது சென்னையில் வரும் கிரிஸ்மஸ் லீவில், டிஸம்பர் 28, 29-ம் தேதிகளில் சென்னை மாகாண ஆசிரிய மானேஜர்கள் மகா நாட்டை நடத்த தீவிர ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. பல ஜில்லாக்களிலிருந்து வரும் பிரதிநிதிகளுக்கு இலவசமாக சாப்பாடும், இருக்க இடங்களும் தயார் செய்யப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு ஆசிரிய மானேஜர்களும் இம்மகா நாட்டிற்கு தவறாமல் விஜயம் செய்து சிறப்பாக கூட்டத்தை நடத்திவைப்பார்களென நம்புகின்றோம். இன்னும் இம்மகா நாட்டைப்பற்றிய விஷயங்களை இப்பத்திரி காலயத்திற் கெழுதி தெரிந்துக்கொள்ளலாம்.

## சென்னை மாகாண ஆசிரிய மானேஜர்கள் நான்காவது மகாநாடு.

1-12-34-ல் நடந்த ஆசிரிய மானேஜர்கள் மாகாண சங்கத்தின் நிர்வாகக் கமிட்டி கூட்டம் சென்னையில் கூடிற்று. பல ஜில்லாக்களிலிருந்தும் ஜில்லாச் சங்கங்களும், பிரதி நிதிகளும் இந்த டிஸம்பர் விடுமுறை நாட்களில், அவசியம் இம்மகா நாட்டை நடத்தவேண்டுமென்றும், தங்கள் பிரதி நிதிகளை அனுப்புவதல்லாமல் தங்களாலான பொருள் உதவியைச் செய்வதாயும் பல கடிதங்களை எழுதியிருந்தனர். அதன்படி இந்த டிஸம்பர் விடுமுறை நாட்களில் அதாவது டிஸம்பர் 4-வது வாரத்தில் இம்மகா நாட்டை கூட்டிவைப்பதென்பதாக இந்த நிர்வாகக் கமிட்டியில் தீர்மானிக்கப்பட்டது.

---

## சென்னை மாகாண ஜில்லாக் கல்விச்சபை அங்கத்தினர்கள் மகாநாடு.

இம் மகாநாடு டிஸம்பர் 27-ம்தேதி நடத்தப்படுவதற்காக பல ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. ஒவ்வொரு ஜில்லாவிலும் கல்விச்சபைகளிலுள்ள (District Educational Councils.) ஆசிரிய மானேஜர்கள் இம்மகா நாட்டிற்கு தவறாமல் விஜயம்செய்து அந்தந்த கல்விச்சபைகளிலுள்ள எய்டட் பாடசாலைகள் சம்மந்தப்பட்ட பல குறைப்பாடுகளை நிவர்த்தி செய்வார்களென நம்புகின்றோம்.

## கல்வி யிலாகா புதிய டைரக்டர்.

தற்போதுள்ள திரு. W. E. ஸ்மித் இம்மாதம் 10-ம்தேதியிலிருந்து 10 மாதம் ரஜாவில் போவதாகவும், அதற்குப் பதிலாக திரு. சாம்பியன் அவர்களை டைரக்டராக ஏற்படுத்தியிருப்பதாகவும். அவர் இம்மாதம் 14-ம்தேதி தன் புதிய உத்தியோகத்தை வகிக்கப் போவதாகவும் வதந்தி.

# வைணவ சமயம்

கௌமாரக் குருகுலக் கல்விப் பிரசுரம் 1.

---

## வைணவம் பிராமண மத மல்ல.

வைணவ சமயத்தைத் தற்காலத்தில் நிலைநாட்டியவர் இராமானுஜரே ஆயினும், வைணவ மதம் பிராமணாள் மதம் என்ற எண்ணம் உதிக்கக் கூடாது. ஏனெனில்:—

(1) இம் மதத்தின் ஆதி ஆதாரம் வேதமும் வேதாந்தமுமே. இதை முதலில் தெரியச் சொன்னவர் சூத்திரகுலத் திலகரான ஆதிவென் சடகோபரென்னும் ஆழ்வாராதிகள் திலக ரத்னமான நம்மாழ்வார்.

(2) ராமானுஜரின் ஆப்த நண்பரும் ஆசாரிய முறையில் அவரால் வகிக்கப்பட்டவருமானவர் சாத்தாதவ குலத்திலுதித்து ஸ்ரீ வரதராஜப் பெருமாளுக்கு பரமபக்தரான திருக்கச்சி நம்பி என்று வழங்கிவரும் பெயரை யுடைய காஞ்சி பூர்ணரே யாவர். இவர் பிராமணரல்ல.

(3) ராமானுஜர் சரித்திரத்தில் அதி முக்கியமான சம்பவம் என்னவென்றால் கோஷ்டி பூர்ணரிடம் 18 தடவை திருக்கோட்டியூருக்கு நடந்து, பின்பு அதில் அவரால் உபதேசிக்கப்பெற்ற, திருவஷ்டாக்ஷர மந்திரம் பரம ரகசியமென்றும், அவ்வாசிரிய ராணையை மீறி அம் மகாமந்திரத்தைப் பிறருக் குபதேசித்தால் நரக ப்ராப்தி ஸித்தமென்று அறிந்த நம்மாச்சரியப் பெருமாள், அம் மகாமந்திர பலத்தால் உலகத்து ஆன்மகோடிகள் உஜ்ஜீவித்து மோக்ஷ மடைவது திண்ணமென பூர்ண நம்பிக்கையுடன் தான் ஒரு ஆத்மா நாசமடைவதைப் பொருட்படுத்தாமல், அதிக காருண்யத்துடன் அம் மந்திரத்தை அவ்வான்ம கோடிகள் உய்யுமாறு வெளிப்படையாக அதி சுலபமாகத் தெரிவித்தார்.

(4) பிறப்பினாலேயே உண்டாகும்ஜாதிபேதங்களைக்கொண்டு உயர்வு தாழ்வு பாராட்டும் இக் காலத்தவர் ராமானுஜரை மேற்கோளாகக் கூறமுடியாது. சாத்தாதவ குலத்துத் திருக்கச்சி நம்பியைப் பெரியோராய் மதித்த இவர் யதீந்திரரான பிறகும் கீழ் ஜாதி என மதிக்கப் படுவோரிடம் விசுவாசமும் நன்றியறிதலும் பாராட்டி அவரை பிராமணரைப்போலவே மோக்ஷத்துக்கு அருஹரென்றே பாவித்தார். குலோத்துங்க சோழன் கொடுமைக்கஞ்சி நாட்டை விட்டு ஓடியபோது, வழியில் காட்டிலுறையும் வேடர் குடிசையில் தங்கி அவரிட்ட அன்னத்தைப் புசித்து அவர்களை நன்மார்க்கத்தில் நடக்கச் செய்தார்.

## மேல் ஜாதியாரின் முக்கியக் கடமை

பஞ்சமர்களுக்குப் பறையரெனும் இழிப் பெயரை மாற்றி திருக்குலத்தார் எனும் பெயரைச் சூட்டி, கோயிலில் பகவான் ஸன்னதியில் பலிபீடம்வரை அவர்கள் செல்வதற்கு அதிகாரம் கொடுத்து, ஆலயத்தில் திருக்குளத்தில் ஸ்நானம்செய்யவும், வைஷ்ணவர்களுக்குக்குரிய பஞ்ச ஸம்ஸ்காரங்கள் பெறவும், திவ்ய ப்ரபந்தங்களைப் படனம் செய்து மோக்ஷ அருகர்களாகவும், இத்தியாதி உரிமைகளைத் தந்தருளின ராமானுஜர் மதத்தைக் கைப் பற்றின பிற்கால வைணவர் அவருடைய கொள்கைகளை மறந்தனரோ? அல்லது வெறுத்தனரோ? (Elevation of the depressed classes) அகப்பட்ட ஜாதியாரின் மேலேற்றம் என்பது இக்காலத்தில் இராஜீய மேல் நோக்கத்திற்காக ஒரு வீண் பதமாக (Catch (word உபயோகிக்க படுகின்றதேயொழிய அதின் சாரத்தைக் கிரகித்து நடப்பதைக் காணோம்.

850 வருஷங்களுக்குமுன் ராமாநுஜரால் ஆரம்பிக்கப்பட்ட இந்த நற்காரியம் இவ்வளவு வருஷங்களில் பூர்த்தியடைந்து இப் பஞ்சமர்களெனப்படுவோர் நம் ஸமூகத்து ஒரு பலத்தை அடிப்படையாய் இருப்பதுபோய், ராமாநுஜர் மதஸ்தர்களான வைணவரின் அசட்டையினால், குற்றத்தினால், (Criminal folly) குருநாதருடைய போதனைகளை அறவே மறந்தோ, வெறுத்தோ, பாபமே அவர்களைத் தூண்ட நம் தேச முன்னேற்றத்திற்கு இப் பஞ்சமர்களை ஒரு தடையாக்கிக் கொண்டனர்.



ஆயினும் காலச் சக்கரம் சுழன்று வருகிறதால், வைணவர் அவர்கள் பாவத்தை அனுபவிக்குங் காலம் ஸமீபத்திருக்கிறது. நாம் எதிர்பாராவண்ணம் அடக்கப்பட்ட ஜாதியாராகிய பஞ்சமரெனப்படுவோர், மூலபலம் போன்ற சக்தியை உடையவர்களாய், மேல் கிளம்பித் தங்கள் முன்னேற்றத்தைத் தம் முயற்சியிலேயே அடைவாரென்பது திண்ணம். அக் காரியத்திற்கு அனுகூலமாய் அவர்கள் செய்யும் பிரயத்தனத்தில், மேல் சாதியென மதித்துக் கொள்ளுபவர்களை ஆழ்ந்த தண்ணீரில் அமிழ்த்திவிடாமுன்னம், அப் பஞ்சமரை உயர்த்துவதில் மேல் ஜாதியெனப்படுவோரும் சிரத்தையுடன் உழைப்பதே தர்மம், நீதி, நம்தேச க்ஷேமத்துக்கு அத்தியாவசியம் என்பதைச் சீக்கிரம் காலதாமத மன்னியில் நாமறிய வேண்டும்.

## வைணவ விசிஷ்டாத்துவைத தத்துவங்கள்.

தத்துவ விசாரணை என்றால் நம் அனுபவத்திலுற்ற விஷயங்களை ஒழுங்கு படுத்துவதேயாகும். (Unification of the diversity of experiences.) அப்படி ஒழுங்கு படுத்தும்போது மூன்று பெரிய விஷயங்களுள், யாவற்றையும் அடக்கலாம்:— (1) ஜீவாத்மா (Soul) (2) பரமாத்மா (Cod) (3) ப்ரகிருதி (Matter) ஆனால் தத்துவ ஞானிகள் இம் மூன்றும் தனித்தனியே நித்தியங்கள் என்று எண்ணித் திருப்தியடைவதில்லை. ராமானுஜ மதமாகிய வைணவ சமயத்தை, விஸிஷ்டாத்து வைதத்தை, அறியவேண்டுமானால் சங்கரருடைய அத்துவைதத்தை அறிந்துகொள்வது அவசியம். ஏனெனில் அத்துவைத மத தாத்பரியங்கள் அவர் மனதிற்குத் திருப்திதரவில்லை. வேதாந்தங்களுக்கும் உபநிஷத்துக்களுக்கும் அவை விருத்தமென்றெண்ணி, வேறுவிதமான தாத்பரியங்களைத் தன் கிரந்தங்களில் தெரிவித்துத் தன் மதத்தில் பரவச்செய்தார். இவ்விரு ஆசாரியார்களுக்கும் முக்கிய பேதங்களாவன:—

(1) இருவரும் கடவுள் (பிரம்மம்) ஒருவரே என்றும், ஜீவனும் பிரகிருதியும் கடவுளின் சக்தி (Attributes) யென்றும், கொள்கையுடையரேனும் அப்பிரம்மத்துக்கும் ஜீவன் ப்ரகிருதிகளுக்குமுள்ள பேதா பேதங்களைக் குறித்துச் சொல்லும் போது முரண்படுகிறார்கள். சங்கரர் கொள்கை சித், அசித், அதாவது ஜீவன்

பிரகிருதி ஆகிய இரண்டும் நிஜமல்ல. ப்ரம்மம் ஒன்றே நிச்சயமான பொருள். ஜீவனென்றும் பிரகிருதி என்றும் தோற்றுபவை அவித்யா அல்லது அஞ்ஞானத்தால் உண்டாகும் தோற்றங்கள். ராமாநுஜர் கொள்கையோ ஜீவனும் பிரகிருதியும் நிஜமான தத்துவங்கள், பொருள்கள். இவை பிரம்மத்தின் சக்திகள். விஸிஷ்டாத்வைத மதத்தில் பரபிரம்மம் சரீரி அல்லது பரமாத்மா. ஜீவனும் பிரகிருதியும் அப் பரமாத்மாவின் சரீரம். இதுவும் அத்வைதமேயாயினும் சங்கர் அத்வைதத்தினும் விசிஷ்டமானது.

(2) சிருஷ்டி என்பது அத்வைத மதத்தில் நிஜமல்ல. சுத்தப் பிரம்ஹத்தை அவித்தை மூடிக்கொள்ள அது மறைபட சிருஷ்டி என்னும் விதங்களாகக் காணப்படுகின்றன. விசிஷ்டாத்வைதத்திலோ பிரஹ்மன் தன் இணைபிரியாத சக்தி அல்லது விசேஷங்களாகிய, சித், அசித் இரண்டையும் வெளியாக்கிக் காட்டுவதே சிருஷ்டியெனப்படும். இப்படி பிரம்ஹம் சிருஷ்டி செய்வது அவருக்கு லீலை, விளையாட்டு. ஆதியில்லாத கர்மத்தின் பல பிராப்தமாக ஜீவன்களுக்குச் சரீரங்களைத் தந்து சுயேச்சையுடன் (Free-will within limits) அந்த ஜீவன்கள் மறுபடிசெய்யும் கர்மங்களின் பழி பாவங்களை அனுபவிக்கிறார்கள்.

(3) இருசாரார்க்கும் வேதமும், ஸ்மிருதிகளுமே பிரமாணம். இதனால் புத்திக்கும் இடமில்லை யென்பதல்ல. இந்திரியாதி விஷயங்கள் ஆராய்ச்சியில் புத்தியை செலுத்தலாம். அல்லது வேதங்களின் அர்த்தங்களைக் கிரஹிப்பதற்கு அதை உபயோகிக்கலாம். நமக்கு அகோசரமான விஷயங்களில் புத்தியின் ஸகாயம் பலப்படாது. அப்படி அகோசரமானவைகளே வேதங்களும் உபநிஷத்துக்களும்; அவைகளில் அடங்கியிருக்கும் அரிய விஷயங்கள். இந்திரிய விஷயங்களில் மாத்திரம் பிரவிருத்திக்கும் நமது புத்திக்கும் எட்டாதவைகளும் நம்மிலும் மேன்மையான ஜீவன்கள் சுவானுபவத்தால் அதாவது ஆத்ம ஞானத்தால் அறியும் பெரிய விஷயங்களாகும். இப்படிச் சொல்வது ஒவ்வாதென்று எண்ண இடமில்லை. இந்திரிய விஷயங்களிலும் கூட நம் புத்திக்கெட்டாத விஷயங்களை நம்மிலும் பெரியவர்கள் இந்திரிய அபிப்பிராயங்களினால் கண்டுபிடித் திருப்பவைகளை நாம் நிஜமென்று ஒப்புக்கொள்ள

(171-ம் பக்கம் பார்க்க)

# உதய குமாரன்

## வஞ்சித்தாரை தெய்வம் தண்டிக்கும்

### ஓர் இனிய் தமிழ் நாடகம்

(முன் தொடர்ச்சி)

கேசரி : என் அருமை தங்காய்! நின் நாயகருக்கும் நினக்கும் தீங்கிழைத்த பாதகனைக் கொல்லாது விடுவதில்லை. அதற்கான பிரயத்தனங்கள் செய்துகொண்டுதான் வருகின்றேன். என் செல்வியைச் செட்டி மகனுக்குக் கொடுத்தேனே என்ற கவலை சிறிதிருந்தது. தெய்வ சங்கற்பத்தால் வீராதி வீரனை என் தங்கை மகனுக்கே கொடுக்க நேர்ந்த விதிப்பயனுக்காக மிகவும் சந்தோஷிக்கின்றேன். கண்மணி நின்நாயகனெங்கே?

சயிந்தை : என் அருமைத் தந்தாய்! மகா பாதகனை அத் துஷ்டத்தும்மன் தன் பட்டத்தியானையின் துதிக்கையைத் துணித்தாரென்று மயான தேவதைக் கோயிலுக்கு அழைத்துச் சென்று அவ்விடத்துப் பலியிடுமாறு கட்டளையிட்டனனும் தெய்வானுகூலத்தால் அவன் எண்ணிய வாக்கு நிகழாது என் நாயகர் உயிர் பிழைத்து எவ்விடமோ ஓடி ஒளித்தனராம். அவர் சென்ற விடம் யான் அறியேன்.

கேசரி : (மிகவும் கோபித்து) அடா பாவி என் மைத்துனரைக் கொன்றதல்லாமலும் என் மருமகனையும் கொல்லவா முயன்றாய். இனி ஒரு நிமிஷமும் தரியேன். இன்றே என் சேனையைத் திரட்டிச் சென்று அவனைக் கொன்று என் மருமகனைச் சிம்மாசனத்திருத்துகின்றேன்.

மேகலை : அண்ணா! கோபம் வேண்டாம். இவ்வளவு தூரம் காப்பாற்றிய கடவுள் அதையும் முடித்து வைப்பார். சினத்தைச் சற்றே தணித்து 56 தேசத்து மன்னர்களுக்கும் ஓலைபோக்கி இவ்விடம் வரச்செய்து, அப்பொழுது நான் அவ்விடம் வந்து எனக்கும் என் நாயகர்க்கும் என் புத்திரவர்க்கம் நடத்திய கொடுமைகளையெல்லாங் கூறி எல்லா மன்னர்களையும் அவனுக்கு வைரியாக்கித் தாங்களும்அம்மன்னர்களோடு சேர்ந்து

அவனைக் கொன்று நம் கண்மணியைத் தேடிப் பட்டம் கட்டி வைப்போம்.

பதுமுகன் : அம்மையார் யோசனையே மிகவும் தகுந்தது. ஏனெனின் நம் சீவோதயன் அக்காலத்து இவ்விடம் வந்தாலும் வருவன். நாமெண்ணிய காரியமும் முட்டின்றி முடிவு பெறும்.

கேசரி : சரி. அப்படியே செய்வோம். யாரடா சேவகன்.

சேவகன் : வந்தேன். கட்டளைப்படி சித்தம்.

கேசரி : சீக்கிரம் சென்று நம் மந்திரியாரை அழைத்துவா.

சேவகன் : கட்டளைப்படி (போதல்)

கேசரி : அடி என் கண்மணி துக்கமின்னதென்றறியாத நீ இவ்வளவு துக்கத்தை எப்படி அனுபவித்தனை?

செஞ்சொல்லை நினைந்துருகு நெஞ்சிற்புண்ணும்
தீருமென்றே சங்கரன்பாற் சேர்ந்தேனப்பா
கொஞ்சமல்ல பிரம்படியின் புண்ணும் வேடன்
கொடுங்காலா லுதைத்த புண்ணுங்கோபமாகப்
பஞ்சவரிலொருவன் வில்லா லடித்த புண்ணும்
பாரென்றே காட்டி நின்றான் பரமன்தானே.

முன்னொருநாள் ஓர் கவிராயர் மிக்க வறுமையால் மெலிந்து சிவனிடம் சேர்தலும் அப்பா மகனே நீ என்னினும் மிக்க அதிர்ஷ்டன். நீயோ வறுமை நோய் ஒன்றால் வருந்துகின்றாய், நானோ வருந்துவது சிறிதல்ல பாண்டியனது பிரம்பால் உண்டான புண்ணையும், வேடனாகிய கண்ணப்பன் வலிய காலினால் உதைத்ததாலாகிய புண்ணையும், பாண்டவருள் ஒருவனாகிய அர்ச்சுனன் தனக்கே கோபமுண்டாகிப் பாசுபதாஸ்திரம் பெற வந்தபோது வில்லடிப்பட்டதனாலுண்டாகிய புண்ணையும் பார் என்று காட்டி நின்றனராம். அப்படியிருக்க நம் போன்ற சாமான்யர்க்குச் சங்கடம் ஒருக்காலும் சந்தோஷம் ஒருக்காலும் மாறி மாறி வந்துகொண்டே இருக்கும். எல்லாம் வினையின் பயனே யன்றோ.

மதிவாணன் : அரசே! வந்தனம். ஏது இக்காலத்து இவ்விடத்து அழைத்த காரணம்.



கேசரி : உட்காரும் பல தேசத்து மன்னர்க்கும் இன்று ஏழாம் நாள் விருந்தென்று ஓலை போக்கிவையும்.

மதிவாணர் : கட்டளைப்படியே செய்கின்றேன். தங்கள் திருக்குமாரத்தியார் இன்று தாய் வீடு வந்தார்கள்போலும், தவவேடம் பூண்டிருக்கும் அவ்வம்மையார் யாவர்.

கேசரிவர்மன் : எல்லாம் இன்று ஏழாம்நாள் தெரியவரும். நீர் சீக்கிரம் சென்று என் கட்டளைப்படி செய்துவைப்பீர்.

மதிவாணர் : கட்டளைப்படியே (போய்விடுதல்.)

கேசரி : நேரமாகின்றது. நீங்களனைவரும் பசியாலும் விசனத்தாலும் மெலிந்திருக்கின்றீர். வாருங்கள் போவோம்.

துஷ்டத்தும்மன் சபை.

துஷ்டத் : மதிவாண நம் மூர்வளப்ப மெப்படி யிருக்கின்றது? நம் குடிகள் நம்மைப் பற்றியென்ன பேசிக்கொள்ளுகின்றார்கள். பதுமுகன் செய்தி ஏதாயினும் தெரிந்ததா. என் அருமைப் புதல்வி காந்திமதி தன் நாயகனைக் காணாது கவன்று அவனைத் தேடிக் காணுமாறு அரண்மனையையும் விட்டுச் சென்று, தாய் தந்தையர்களையும் மறந்து எவ்விடமோ போய் விட்டனள். இதற்கு நான் என் செய்வேன். அவள் சென்றது முதல் என் மனைவி புத்திரியின் பிரிவாற்றாது உணவும் உறக்கமுமின்றிக் கலங்குகின்றனள். இது வல்லாமலும் நேற்றிரவு ஓர் பொல்லாத கனவு கண்டேன். அது என்னவென்றால் கீழ்திசையிலிருந்து ஓர் அம்பு மேலெழுந்துவந்து என் மார்பைப் பிளந்து செல்லுதம், பிறகு எல்லா திசையினின்றும் பல வம்புகள் எழுந்து உடம்பு முழுவதையும் சல்லடைக் கண்களாக்கின. இச்சம்பவம் எதற்கோ ஏதும் அறியேன்.

மதிவாணன் : சிறிது காலமாக நம் நாட்டில் மழை என்பதே கிடையாது. பஞ்சம் எவ்விடத்தும் உயிரை வாட்டுகின்றது. இம்முறையை யாம் அறியாமல் விதிக்கப்பட்ட வரிகளினால் குடிமக்கள் மிகவும் கோபங் கொண்டிருப்பதாகத் தெரியவருகின்றது. மேலும் குடிகளுக்கு உயிர் போன்றிருந்த சீவோதயனை எக் காரணத்தாலோ கொலைக் காளாக்கினீர்களென்று தங்கள் மீது மிகவும் வெகுண்டிருக்கின்றனர் போலும்,

தங்கள் குமாரத்தியின் செய்தியாவது, அவர் தம் நாயகரின் செய்தியாவது ஏதும் தெரியவில்லை. தாங்கள் நேற்று கண்ட சொப்பனத்தை நினைத்தால் நம் நாட்டிற்கு ஏதோ கெடுதி சம்பவிக்கும்போல் தோற்றுகின்றது.

துஷ்டத் : குடிகளின் கோபம் நம்மை யென்ன செய்யக்கூடும் சீவோதயன் உயிருடனிருந்தால் நீ கூறியபடியே ஏதாவது கேடு நேரிடினும் நேரிடலாம். அவன் துலைந்து விட்டான். இனி என்ன நடக்கும். எம னறியாது உயிர் போவதில்லை. அது போன்று யாமறியாது நம் மரசுக்கு என்ன அழிவு நேரிடக்கூடும்.

சேவகன் : இராஜாதி ராஜ! ஜெய கேசரி வர்மரிடமிருந்து ஓர் தூதுவன் வந்திருக்கின்றூர். தங்கள் சமுகம் வர உத்தரவு வேண்டுமாம்.

துஷ்டத் : உள்ளே வர விடு

தூதுவன் : அரசே! வந்தனம். ஜெய கேசரி வர்மர் இது வோலையைத் தம்மிடம் அளித்து வருமாறு கட்டளை யிட்டார்.

துஷ்டத் : மந்திரி! ஓலையை வாங்கி வாசித்துச் செய்தி யின்னதென்றுரையும்.

மதிவாணன் : இன்று ஏழாம் நாள் ஜெய கேசரி வர்மன் இராஜக்கிருகத்தில் விருந்தெனவும். அதற்குத் தம்மை வரும்படியாகவும் வேண்டி யிருக்கின்றூர்.

துஷ்டத் : எப்படியும் நான் போகவேண்டியதுதான். நான் போகும்போது என்னுடன் சில வீரர்களும் நம் வீரத் தலைவரும் வரவேண்டும். அவர்கள் யாவரும் அரச னறியா வண்ணம் ஊருக்கு வெளியில் இருக்கவேண்டும். சேனைத் தலைவரே என்னுடன் வரவேண்டும். நான் புறப்பட்டுப் போவதற்கான பிரயத்தனங்களைச் சீக்கிரம் சென்று செய்யும்.

மதிவாணர் : அரசே! அப்படியே சித்தம் செய்கின்றேன் (போய் விடுதல்.)

# தொழில் அபிவிருத்தி

(Industrial Advancement)

## களிமண் மை

ஒரு வகைக் களி மண்ணிலிருந்து அச்சடிக்கும் மை செய்து வருகிறூர்கள். இந்த மை ஒரு காலத்திலும் அழிவதே கிடையாதாம்.

## மிதக்கும் உலோகம்

அலுமினியத்தை விடக் கனங்குறைந்த உலோகங்களுமிருக்கின்றன. லிதியம் என்ற உலோகந்தான் மிகவும் கனம் குறைந்ததாகும். இது கார்க்கைப்போன்று நீரில் மிதக்குமாம்.

## வெங்காயத்திலிருந்து சாயம்

சாதாரண வெங்காயத்திலிருந்து பல வர்ண சாயம் செய்யும் முறையை ஒரு நீக்ரோ டாக்டர் கண்டுபிடித்திருக்கிறூர். மாத்துளிலிருந்து ஒருவித பளிங்குப்பலகை செய்யவும் அவர் கண்டுபிடித்திருக்கிறூரெனத் தெரிகிறது.

## பிள்ளைகளுக்கு விமானங்கள்

சிறு பிள்ளைகளும் விமானங்களை ஓட்டக்கூடிய விதத்தில் பிரஞ்சு நிபுணர்கள் சில நூதன முறைகளைக் கண்டுபிடித்திருக்கின்றூர்களாம். ஓட்டக்கூடியவர் பொத்தான்களை அழுத்தின வுடனே விமானம் பறக்கவும், கீழே இறங்கவும் கூடுமாம். சகலவித விமானங்களிலும் இந்த இயந்திரத்தைப் பொருத்த முடியுமாம். ஆகாய வசனி மூலமாகவும் விமானங்களைச் செலுத்த முடியுமென நம்பப் படுகிறது.

---

வில்லையா? அப்படி யிருக்க ஆத்ம விசாரங்களில் மிகுந்த அனுபவங்களுற்ற மேன்மையான ஜீவாத்மாக்கள் சுவானு பாவங்களாலும், மற்ற வகையாலும் அறிந்து வேதங்களில் முறையிட்டுள்ளார் என்றூல் அவைகளை நாம் ஏன் நம்பக்கூடாது?

## உயிர் பெறும் உருவச் சிலை

லண்டன் நகரத்தில் ஒரு சிற்பி இருக்கிறார். அவர் ரப்பரால் ஒரு பெண் உருவம் செய்திருக்கிறார். அதற்கு அவர் 'அவள்' என்று பெயரிட்டிருக்கிறார். மண்டைப்பகுதி பற்பல தனிப் பகுதிகளாகச் செய்யப்பட்டு ரப்பர் தலையணி ஒன்றால் சேர்த்து ஒன்றாக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தலையணியில் உரோமம் புருவம் முதலிய அநேக அமைப்புகள், பொருத்தப் பட்டிருக்கின்றன. அவ்வுருவத்துக்குள் ஒரு மோட்டார் இயந்திரம் வேலைசெய்கிறது. அதன் உதவியால் அவ்வுருவம் நகைப்பது போலவும், அழுவது போலவும், கோபிப்பது போலவும் காட்டுகிறது. வருங்காலத்தில் எல்லாவிதமான சிற்பவேலைகளும் உயிர் பெற்றவை போல இயங்கும் எனப்படுகிறது.

## பறவைபோல் பறக்க முயற்சி

பறவைகளைப் போலவே மனிதர்களும் தங்களுடைய சொந்த தேக சக்தியால் ஆகாயத்தில் பறக்கும் சக்திபெற வழிகாண வேண்டுமென்று சிருனோ விஸ்கி என்னும் சோவியத் விஞ்ஞானி முயற்சித்து வருகிறார். அவ்வறிஞர் அதன் பொருட்டு ஒரு நூதனமான பொறியைச் சிருஷ்டித்திருக்கிறார். அந்த இயந்திரம் தலையில்லாத ஒரு கடற் பறவையைப்போலச் செய்யப்பட்டிருக்கிறது. இயந்திரத்தை இயக்க பறப்பவருடைய கைகளும் கால்களும் உபயோகிக்கப் படுகின்றன. அதை இறக்கிப் பறக்கச்செய்வது யாருக்கும் மிகச் சுலபமாக விருக்குமென்றே அந்த விஞ்ஞானி கூறுகிறார். இந்த நூதனமான ஆகாய இயந்திரம் அனுபவத்திற்கு மிகவும் சாத்தியமானதாகவே இருக்குமென்று ஆகாய விமான நிபுணர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள்.

## நீராவி விமானம்

ஜெர்மன் நிபுணர் ஒருவர் நீராவியால் பறக்கும் விமானம் ஒன்றைக் கண்டுபிடித்திருக்கிறார். அதன் அளவு பெரிது. என்றாலும் பர்லினிலிருந்து ஒரே மூச்சாக சிங்கப்பூர், ஜப்பான், அமெரிக்காப் போன்ற இடங்கட்குப் பறந்துவிடும் என்று கூறுகிறார். இவ்விமானத்தில் அமைந்திருக்கும் மோட்டார் 2,500 குதிரை வேகம் உடையது.

# சுகாதாரப் பகுதி

## மலச் சிக்கல்

இக்காலத்தில் முக்கியமாய் நகரவாஸிகளுக்குள் 100-க்கு 99 நபர்கள் மலச்சிக்கல் நோயால் கஷ்டப்படுகிறார்கள். பக்ஷி மிருகங்களுக்குள் மலச்சிக்கலில்லை என்று இரத்த சோதகர்கள் கூறுகிறார்கள். நாள் 1-க்கு மூன்று தரம் கொல்லைக்குப் போகிறேன் எனக்கு மலச்சிக்கல் கிடையாதென்று சிலர் கூறுகிறார்கள். ஆனால் இடுப்பு வலியுண்டு. ஜீரணசக்தி யில்லாத விடத்து ஆரம்பத்தில் சில காலம் இவ்விதமிருந்து பிறகு சீதபேதி காண்பது வழக்கம். மலச் சிக்கல் மலக்குடல் வரைக்குமே பொருந்தும் என்று கூறும் வைத்தியர்கள் இவ்விதம் கூறுகிறார்கள். ஞானிகள், மலத்தேக்க மில்லாத சுத்த ரத்தமே மலச் சிக்கலில்லாமைக்கு தக்க அடையாளமாக கூறுகிறார்கள். நிர்மலமான இரத்தமுள்ள விடத்திய அடையாளம் ஞானம் ஆனந்தமென்றும் கூறுகிறார்கள். தின வேலைகளை சந்தோஷமாய்ச் செய்வதே முக்கிய அடையாளமாகவும் கருதுகிறார்கள்.

## ஊனக்கண் பார்வை

மக்கள் என்பதை 132-பவுன் எடை, 5 அடி, 4 அங்குலம் உயரம், என்று எண்ணாத படிப்பாளிகள் வெகு சிலரேயாகிறார்கள் Body is made up of cells. உடல் சாலங்கள் என்னும் தனி ஜீவ

---

## கொலை செய்யும் பென்சில்

ஒரு பிரஞ்சு ரசாயன நிபுணர் ஒரு வகையான பென்சிலைச் செய்திருக்கிறார். அதனை ஜேபியில் மாட்டிக் கொள்ளலாம். நல்ல "கிளிப்பும்" எழுதும் பகுதியுமிருக்கின்றன. ஆனால் எழுதக் கூடுமோ வென்றால் கூடாது. அதிலிருக்கின்ற ஒரு சிறு பொத்தானை அழுத்தினால் உடனே விஷவாயு வெளிப்படும் அதனை யார் யார் சுவாசிக்கின்றார்களோ அவர்கள் மூர்ச்சையாகி விழுந்து விடுவர். திருடர்கட்கும், சூழ்ச்சிகாரர்கட்கும், நய வஞ்சகர்கட்கும் அது மிகுந்த உதவியா யிருக்கலாம். (தொண்டுச் செல்வம்)

கணங்களின் கூட்டுப்பொருள் என்று கோடிதரம் சொன்னாலும் அவர்கள் மனதில் தற்காலமாய் இது படிந்தாலும் மறந்தே விடுகிறார்கள். மறுபடியும் "பழைய குருடி கதவை திறடி" என்றபடி பாசி வந்து மூடுகிறது. மனதைச் சுற்றிக்கொண்டிருக்கும் சைதன்ய கணங்களின் கூட்டமே உடல் என்ற அறிவு உண்டாய் விடுமாயின் பிறகு நோய்களுக்கு வேலையுண்டா?

மனக்கண் எல்லா ரூபங்களையும் மனக்கண்ணால் பார்ப்பவர்கள் உடல் கணங்களின் தொகுதிப் பொருள் என்று கொள்ளத் தவற மாட்டார்கள். உடலைப் பார்க்கும்பொழுது கணங்களின் கூட்டமாகவே கொள்ளுகிறார்கள். "அகத்தினழகு முகத்தில் தெரியும்" "ஆளைப்பார் முகத்தைப்பார்" முகத்தின் கணங்களை கவனிக்கிறார்கள். கணங்கள் இளைத்திருக்கிறதையும் புஷ்டியாயிருப்பதையும் கவனிப்பதோடு சந்தோஷமாக யிருக்கின்றனவா என்பதையே முக்கியமாய் கவனிக்கிறார்கள். இக்காலத்திய வைத்தியர்களைப்போல் ரத்த மெடுத்து சோதிக்கமாட்டார்கள். இரத்த சோதனையைக் கண்டு நகைப்பார்கள், அறியாமைக்கு இரங்குவார்கள் ஆசியும் கூறுவார்கள்.

அகத்தீ:—கீதை 3-வது அத்யாயம் 13-வது சுலோகத்தில் ஸ்ரீ கிருஷ்ண பகவான் "அஹம் வைஸ்வாநரோ பூத்வா ப்ராணிநாம் தேஹ மாச்ரித : ப்ராணா பான சமா யுக்த : பசாம் யன்னம்: சதுர் விதம்" எனக் கூறியிருக்கிறார். இதன் கருத்து:—யான் அகண்ட அகத்தீ சத்தியாகி ப்ராணிகளின் உடலைச் சார்ந்து ப்ராண, அபான வாயுக்களாகவும் மாறி அவர்கள் கொடுக்கும் நான்குவித அன்னங்களை பரிபக்குவம் செய்து உடற் கணங்களை வளர்க்கிறேன்." இதனால் அகத் தீயை கவனிக்கவேண்டியது முக்கிய கடமை யென்று விளங்குமன்றோ? இக்கடமையை ஈ, எறும்பு முதலான அண்ட சராசரத்திலுள்ள எப் பிரயாணியும் கவனித்துச் செய்வதால் சுகம்பெற்று வாழ்கின்றன. விவசாயிகளில் பலர் இக்கடமையை மதித்தே வருகிறார்கள். குழந்தைப் பருவத்தில் யாமும் கவனித்து நடந்தோம். மணிக்கணக்கு பள்ளிக்கூடம் புகுந்த அன்றே இக்கடமையை உல்லங்கனம் செய்தோம். பசி இருப்பினும் இல்லாவிடினும் மணிப்படி உண்டே தீரவேண்டும் என்ற பாடம் படிக்க படிக்க மலச்சிக்கலுக்கு தகப்பனான அமிர்



தப் பசிக் குறைவு ஏற்பட்டுவிட்டது. ஆனால் ஆமப் பசிவலித்து விட்டது. நன்றாய் மனதில் பதிய பிரம்ம ராக்ஷஸப் பசியென்று கூறுகிறோம். அஷ்டமச் சனி, பசி யென்றும் கூறலாம் (Appetite.)

யோகம்:—யோகிகள் என்பவரை செய்யத் தகாத காரியங்களைச் செய்பவர் என்ற கருத்தில் கொள்கிறோம். பசித்துண்பர் ("பசித்துண்") என்று கொள்வதில்லை. இவ்விதம் கொள்ளில் நம்மிடம் நோய் அணுகுமா? நோய் நேர்ந்த பின் (இதுவே பசி சக்தி குறைவு) டாக்டரிடம் போகிறோம். இஞ்சக்ஷன் பெறுகிறோம். இதைக் காட்டிலும் அறீவினம் என்ன வேண்டும்? அமிர்தப்பசி திரும்புகிறதா என்று பார்ப்பதில்லை. என்ன பரிதாபம்! பேதமை! அந்தந்தோ இவ்வறியாமை ஒழியும் நாள் எந்நாளோ? யோகிகள் லங்கனம் யென்னும் திவ்விய ஔஷதத்தினாலேயே அகத் தீயை வளர்த்து கீரையாகிய உணவால் திருப்திசெய்வதால் 100 செவி மழைகளுக்கும் தாங்கக்கூடிய சரீர வலிவு, புலி காடிகளுக் கஞ்சாத் தைரியம் பெற்று காட்டில் வாழ்கிறார்கள். (தொடரும்.)

நோய்:—நோய்கள் பலவிதம், காரணங்களும் பலவிதம், சிகிச்சைகளும் பலவிதம் என்ற படிப்பே நவீன முறையாகும். இதை நம்பாதவர்களுக்கு மெடிகல் சர்டிபிகேட் கிடைக்காது. உத்தியோகம் கிடையாதென்று சொல்லவும் வேண்டுமா? கணக்கற்ற கண்டுபிடிக்க முடியாதவைகளே, நோய்களின் காரணம் என்று சொல்லுகிறவர்களையே குருவாக அடையவேண்டிய தாகிறது. மிருகங்கள் இதை நம்புமா? ஞானிகள் "ஆமபோஜனம்" "மலம் வைத்துண்ணேல்" மலமிருக்கும் காலத்தில் அமிர்தப் பசி இராது. ஆனால் மலப்பசி அதிக முண்டு. மலப்பசி உணவே நோய்களின் மூல காரணமென்று முடிவு கட்டி கூறி இருக்கிறார்கள். அவர்களையே வைத்திய மஹாத்மாக்கள் எனக் கூறத்தகும். சுருக்கிச் சொல்லில் நோய் என்பது மலம் தவிர இதரப் பொருளென்று கொள்ளல் அறி வின்மையாகும்.

# ரவீந்திரநாத் தகூரின் வரலாறு

(முத்துகிருஷ்ணன்)

நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை என்று மாண்புடைத்த இப்பூவுலகின்கண், புகழுடன் தோன்றி மறைந்த பெரியோர்கள் பலராயினும், அந் நல்லோர் உரைத்த பேருரைகளும் தீங்கவிகளும், செம்பாக்களும், கற்றோர் நாவிலே தவிழும் காலத்தும், கேட்கும் காலத்தும் அன்னாரைப்பற்றிய வரலாறுகள் அறிய ஆவலுறுகின்றோம். மாய்ந்த அப் பெரியோருரைத்த பேருரைகள் நிலைபெற்று இன்றும் உலாவியும் சிலாது உண்மை வரலாறுகள் இன்றும் நமக்கு கிட்டாத காரணம் அக்காலத்தில் அப் பெரியாரின் வாழ்க்கை வரலாறுகள் எழுதிவைக்காத காரணமே. இப்போது உலகம் போற்றும் உத்தமரும் அநேக கவிகளை யியற்றி, பல வகுப்பினராலும் பல தேசத்தினராலும் கொண்டாடும்படி செய்து நம் கண் முன்பு தோன்று விளங்கும் ரவீந்தர நாத் தகூர் என்பவர் ஒருவராவர்.

அந் நல்லோர் அவனிக்கே மங்கல நாளெனவென மதிக்கத் தகுந்ததும் சீரும் சிறப்புமுள்ளதும், மாடமாளிகைகள் பல பெற்றதும் வாணிபத்துக்கே உறைவிடமானதுமான காளி கட்டத்தில் 1861ம் ஆண்டு மே மாதம் 6ந் தேதி மகரிஷி தீபேந்திரநாத்தருக்கு இளைய குமாரராக ஜனித்தார். தம் குழவி பருவத்தை இனிதே தம் பெற்றோர்களுக்கு மழலை சொற்களால் அமுதூட்டிய பின், செண்ட் ஜேவியர் பாடசாலையில் சிலகாலமும் தனிமையிலும் கல்விகற்று முதல்தடவையாக தம் 16 வதுவயதில் அதாவது 1877 ஆண்டு இங்கிலாந்து சென்றார். "நற்று மரைக்கயத்தில் நல்லன்னம் சேர்ந்தார்போல்" இங்கிலாந்து தேசத்தில் தகூர் கல்வியில் தேர்ந்த மார்லி பிரபுவின் சகோதரரும் போராசிரியரும் ஹென்றி மார்லி கனவானிடம், ஆங்கில இலக்கிய நூற்களைப்பற்றி லண்டன் சர்வகலாசாலையில் கற்றுணர்ந்து வல்லவரானார்.

லண்டன்மா நகரத்தினின்று திரும்பியபின் சுமார் 50 வால்யூம் பாக்களும் 20 வால்யூம் நாடகங்களும், 6 வால்யூம் நவீனங்களும், 10 வால்யூம் சிறு கதைகளும், 35 வால்யூம் வியாசங்கள் இலக்கியங்கள் மதபோதனைகள், அரசிறை விளக்கங்கள் முதலியவற்றைப்பற்றி எழுதி முடித்தார். மேலும் அநேக விஷயங்களைப் பற்றி செய்யுளாகவும் வசனமாகவும் எழுதி மாத சஞ்சிகைகளுக்கு விஷயதானம் செய்தார். தானே பாரதி, சாதனா, பங்கதர்சன் என்று மூன்று சஞ்சிகைகளை நடத்தினார். 1900 ஆண்டு பால்பூரில் சாந்தி நிகேதனம் என்ற பள்ளியை திறந்தார். 1906ம் ஆண்டு ரவீந்திரர் வங்காள இலக்கிய மகாநாட்டுக்கு தலைமை வகித்தார்.



அவர் கல்வி விஷயத்தில் மாத்திரம் கவனத்தை செலுத்திக் கொண்டுபோகவில்லை. நமது பாரதத் தாய் அடிமை தாள்களைத் தெரிய அரிய தேசத்தொண்டும் செய்திருக்கிறார். 1907ம் ஆண்டு வங்காள மாகாண ராஜீய மகாநாட்டுக்கு தலைமை வகித்து பேருரை ஒன்று நிகழ்த்தியது எந்த இந்தியர் மனதையும் விட்டகலாது. இன்னும் தம்மாலான தேசதொண்டைச் சமயம் வாய்த்த போது செய்யத் தவறி விடுவதும் இல்லை.

1912 ஆண்டு திரும்பவும் இங்கிலாந்து தேசம் சென்று அநேக பெரியோர்களின் வேண்டுகோளால் தாம் வங்காள பாஷையில் இயற்றிய பாக்களை கீதாஞ்சலி என்னும் நாமத்துடன் போராசிரியர் பல்லோர் புகழும்படி ஆங்கில பாஷையில் மொழிபெயர்த்தார். அதற்காக உலகம் போற்றும் உத்தம வெகுமதியான நோபுல் வெகுமதியை 1913ம் ஆண்டு பெற்றார். 1914ம் ஆண்டு காலிகட்டம் சர்வகலாசாலையாரால் டாக்டர் என்ற பட்டமும் அரசாங்கத்தாரால் சர்பட்டமும் பெற்றார்.

தகூர் பேருரைகளை புத்தக வாயிலாகக் கேட்ட உலக மக்கள் யாவரும் நேரில் காண ஆவலுறுவதை அறிந்து 1915, 1916 இரண்டு ஆண்டுகள் அமரிக்கா ஜப்பான் முதலிய தேசங்களுக்குச் சென்று சொற்பொழிவு இயற்றினார்.

1919 ஆண்டு காந்திமகானால் அகில இந்தியா பூராவும் ஒத்துழையா இயக்கத்தை உண்டாக்கியபோது அரசாங்கத்தார் பஞ்சாபில் நடத்திய படுகொலையை கண்டிப்பதின் அறிகுறியாக சர்பட்டத்தை விட்டு விட்டார். மேலும் தேசிய இயக்கத்துக்கு வங்காள மாகாண பூராவுக்கு இரும்புதூண்போல் நின்று தேசிய இயக்கத்தின் கொள்கைகளை வற்புறுத்திக் கொண்டு இருந்தார். சாந்தி நிகேதனத்தில் 1921ம் ஆண்டு விஸ்வபாரதி என்ற பல்கலை கழகமொன்று நிறுவினார்.

கற்றோர்க்கு சென்றவிடமெல்லாம் சிறப்பு என்ற வாக்கியபடி 1921ம் ஆண்டு சீனா ஜப்பான் ஐரோப்பா முதலிய பிரதேசங்களுக்குச் சென்று பேரும் புகழுடன் திரும்பியபெருந்தகையார் வாளாயிராமல் 1926ம் வருடம் மறுமுறையும் ஜாவா மலேயாதேசங்களுக்கு நல்லிசையுடன் சென்று தாயகம் வந்தார்.

உலக யாத்திரை நிமித்தமாக 1930ம் ஆண்டு இதாலி, ஜர்மனி பிரான்ஸ் முதலிய எல்லா ஐரோப்பிய தேசங்களுக்கும் சென்று சொற்பொழிவியற்றி பொது மக்களாலும் அரசர் அரசிகளாலும் சர்வதிகாரிகளாலும் சன்மானமும் நன்மதிப்பும் பெற்றதுடன் நில்லாமல் தான் இயற்றிய புத்தகங்கள் பலவற்றை அந்தந்த தேச பாஷைகளிலும் மொழிபெயர்த்துக் கொண்டனர்.

பல கலைகளிலும் தாங்கள் தான் தேர்ந்தவர்கள் என்று நினைத்திருந்த சில மேல் நாட்டாரிடையே, இந்திய மக்களிடையே பலர் கல்வியில் தேர்ச்சியுற்றோர் இருக்கிறார்கள் என்பதை எடுத்துக் காட்டி தலைநிமிரச் செய்த பாக்கியம் நமது ரவீந்திரநாத் தகூருடையதே. இறைவன் அப்பெருந்தகையாருக்கு ஆயுளை கொடுத்து ரக்ஷிப்பாராக.

---

## சந்தா நேயர்களுக்கு ஓர் அறிவிப்பு

இன்னும் நமது சந்தா நேயர்களில் பலர் 1934-35 இரண்டாவது வருட சந்தாத் தொகையை அனுப்பிவைக்காமல் இருக்கின்றனர். தயவு செய்து சீக்கிரம் மணி ஆர்டர் மூலம் ரூபா 1-0-0. அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம். வி. பி. யில் பத்திரிகையை அனுப்புவதென்றால், இரு பாலருக்கும் பல வகையான கஷ்டங்கள் ஏற்படுகின்றன. மணி ஆர்டர் அனுப்பும்போது புதிய சந்தாதாரரா, பழைய சந்தாதாரரா வென்பதை அவசியம் குறித்தனுப்பவும்.

தாங்கள் பழைய சந்தாவை அனுப்புவதோடு நில்லாமல் இதர ஆரம்பாசிரிய சகோதரர்களையும் சந்தாதாரர்களாக சேர்த்தனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். எவ்வளவு சந்தாதார்கள் அதிகம் சேருகிறார்களோ, அவ்வளவுக்கவ்வளவு பத்திரிகையை பல வகையிலும் விருத்தி செய்வதல்லாமல் குறித்த தேதியில் தவறாமல் அனுப்பிக்க இயலும். ஒவ்வொரு ஆசிரியரும் ஊக்கம் கொள்வாராக.

மானேஜர்.

# உபாத்திமைச் சங்கமும் அதன் நோக்கமும்

(K. வரதாச்சாரி திண்ணனூர்)

சங்கம் என்பதற்கு நாம் இந்த இடத்தில் உபாத்தியாயர்கள் பிள்ளைகளுக்குபோதிக்கும் முறையைக்கற்பிக்கும் கூட்டம் அல்லது பலபேர் கூடியசபை என்று பொருள் கொள்வதே சாலச் சிறந்தது. அதனுடன் அரிய விஷயங்களை உணர்த்துவது கல்விச்சபையாகும்.

## சங்கம் கூடுவதின் அவசியம்

ஒருவரே ஒரு காரியத்தைச் செய்வதில் கொஞ்சமதிப்புண்டு. பலபேர் கூடிச் செய்வதில் விசேஷமதிப்புண்டு. எப்படியெனில் ஒருகாரியத்தை ஒருவன்செய்வதிலும், பலர் பலவிதமாய் யோசித்து செய்வதால் அக்காரியம் இடையூறின்றிச் செவ்வனேநடைபெறும். அத்துடன் ஒருவரால் ஆகாத பெரிய பெரியகாரியம் பலபேர் ஒற்றுமையுடனும், நன் முயற்சியுடனும் உழைத்தால் நிறைவேறும். உலகத்தில் பெரும்பாலோர் அறியும் விஷயங்கள் இப்படி ஒற்றுமையினால் ஆகிறது ஆகையால் சங்கத்தில்ஒற்றுமை இன்றி யமையாதது. இவ்வாறு சங்கமாகக் கூடிச்செய்வது பொதுநலம் எனவும், ஒரு தனிமனிதன் தன் நன்மையை நாடிச்செய்வது சுயநலம் எனவும் பெயர் பெறும். சிலர் ஒரு சங்கமாகக்கூடி ஓர் அரிய விஷயத்தை (பொது நலக் காரியத்தை) எடுத்துரைக்கும்போது இடையில் சிலருடைய சுயநல நோக்கத்தால் விஷயம் முடிவுபெறாமலே கைவிடப்பட்டுச் சங்கம் அடியோடு பங்கமடைகிறதுமுண்டு. நம் நாட்டில் இச்சுயநலம் என்ற பேய்ப் பிடித்துப் பெரிதும் கெடுதலை விளைவிக்கின்றது. அறிவின்மை, பேதமை, குறுகிய நோக்கம் என்பவைகள் நம் தாய்நாடு முன்னேற்ற மடைவதற்குப் பெருந்தடைகளாயுள்ளன. உபாத்திமைச் சங்கம் கூடுவது மேற்சொன்னவைகளை ஒழித்து நாம் கற்று பிறகு நம்மிடம் ஒப்படைக்கும் மாணவர்களைச் சீர்திருத்தவேயாகும். ஆகையால் நாம் தகாத காரியத்தை ஒழிப்பதற்கும் தக்க காரியத்தை கைக்கொள்வதற்கும் ஏற்பட்டுள்ள சங்கமே சிறந்த சங்கமாகும். இவ்வாறு கூடும் அறிவாளர் சுயநலத்தை அறவே மறந்து பொது நலத்தைப் பெரிதும் பாராட்டினால் நம் தாய் நாடு முன்னேற்றமடைவதில் தடையில்லை.

ஆதலினால் யாவரும் ஒருமித்து ஒத்துழைக்க வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் பிரிவுபடக்கூடாது. ஏதாவது அபிப்பிராய பேதமுண்டாயின் பொறுமையோடு ஆலோசித்து முடிவுக்கு வருதல் நலம். இடம், பொருள், ஏவல்களை ஆராய்ந்து பார்க்கவேண்டும். மறந்தும் பிறருக்குக் கெடுதி சூழாதிருக்கவேண்டும். இத்தகைய நல்லெண்ணத்துடன் கூடும் சங்கமே நீடித்திருப்பதுடன் உலகம் கொண்டாடும் பாக்கியத்தையும் அடையும். ஆசிரியராகிய நாமும் நம் சங்கம் சரிவரப் பொதுநலத்துடனிருந்தால்தான் நாமும் நாளடைவில் இதர தேசங்களைப்போல் முன்னேற்ற மடைய ஏதுண்டாகும். இதைவிட்டுச் சிலர் நாம் எதற்குச் சங்கத்திற்குப் போகவேண்டும் நமக்குத் தெரியாத விஷயம் என்ன அவ்விடத்தில் நடக்கிறது, சங்கம் ஒன்று கூடி அவ்விடத்தில் வீண் வம்பு பேசுவதும் விதண்டாவாதம் செய்வதும் என்று சிலர் எண்ணுகிறார்கள்.

சங்கங்கள் நடப்பது நம்மாலல்லாமல் மற்றவர்களால் அல்ல ஆகையால் நாம் ஒன்றுகூடி அநேக விஷயங்களைக் கற்றுக்கொள்ள வேண்டுமென்ற நோக்கத்துடன் உழைக்க வேண்டும். நாம் அநேகவித பாடங்களை சங்கத்தில் நடத்திக் காண்பித்து அதிலுள்ள குற்றங்களைத் தெரிந்தவர் மூலமாய்ச் சீர்திருத்தி நம் மாணவர்களுக்குப் போதிப்பது சாலச்சிறந்தது. அவ்விதமில்லாமல் சிலர் சங்கத்தில் பாடம் நடத்தும்போது குற்றங்களை மாத்திரம் காரணம் காட்டாமலே எடுத்துரைத்தும், வீண் விதண்டாவாதமும் பேசுகிறார்கள். பெரியார் சிறியார் எனும் பேதம் பாராட்டாமல் பெருமையும் சிறுமையும் தாந்தர வாரா என்கிற பேரறிஞர் மொழிப்படி, ஒவ்வொருவரும் நடக்கையின் மேன்மையால் நன்மையாகும் மார்க்கத்தைத் தேடவேண்டுமேயன்றி வீண் தற்பெருமையால் விவாதமும் சிறுமையுமே சித்திக்கும். உலகின்கண் குற்றமிலார் ஒருவருமிலர். சில வேளைகளில் தம் குற்றம் தனக்குத் தோன்றாமல் பிறர் விஷயத்தில் குற்றங்கண்டு கோபங்கொண்டு கண்டிக்கவோ புறம் பேசவோ புகுகின்றோம். இவை முடிவில் பஞ்சமா பாதகங்களையும் செய்யத் தூண்டும் என்பது நிச்சயம். ஆதலால் உயர்வோ தாழ்வோ ஒவ்வொருவரையும் பாதிக்குமென பயந்து மேலோர் கண்டிக்கும் நிலைமையில் செல்லாமலும் மனச்சாட்சிக்கும் மாற்றம் செய்யாமல் இருத்தலே உத்தமமாகும். இதுவுமன்றி கல்விச் செருக்கால் பிற



ரை இகழாமல் இருத்தலும் மேன்மையுடையதாகும். தம்மிற் கற்றோரை நோக்கிக் கருத்தழிக கற்ற தெல்லாம் எற்றே இவர்க்கு என்ற கருத்தை அறிந்தும், தாம் கல்வியில் மேம்பட்டதாய் தகாத முறையில் லவரைக் கண்டிப்பதும் குறைகூறுவதும் அடாத நிந்தனையாகும். கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவு என்ற அருள் வாக்கின்படி நடந்தால் ஐக்கியமும் அளவற்ற நன்மையும் உண்டாகும்.

சங்கங்கள் நிர்வாகம் செவ்வனேயமைக்கப்பட்டாலும் அதை நடத்தும் ஆசிரியர்களும் சிரத்தை பாராட்டினாலன்றி காரியம் கைகூடாது. சங்கக் கூட்டம் மாதா மாதம் கூடினாலும் ஆஜராயிருக்கவேண்டும் என்கிற நிபந்தனையை முன்னிட்டே' சிலர் சென்று வருகின்றனர். உபாத்தியாயர் வேலையில் அமர்ந்துவிட்ட காரணத்தாலேயே தனக்கு யாவும் தெரிந்துவிட்டதென நினையாமல் இருத்தல் வேண்டும். உண்மை ஆசான் தன் ஆயுள் பரியந்தம் மாணாக்கனாகவே இருத்தல் அவசியம் என்பதை உணர்வார்.

ஆரம்ப ஆசிரியரிடத்தில் இருக்கவேண்டிய அருங்குணங்கள்.

1. மலர்ந்த முகத்துடனிருத்தல், 2. கனிந்த மொழியையே கடைபிடித்தல், 3. அகத்தின் பொலிவை முகத்தினால் தெரிதல். 4. வித்தைக்கேற்ற விதை கண்டுபிடித்தல். 5. சேயின் அருமை,யைத் தாயேபோல் அறிதல், 6. உணவெனும் வித்தையை ஊட்டலில் உற்சாகம், 7. இள ஒற்றுமையை ஏற்படுத்தும் விதம் 8. உண்மை உழைத்தலால் ஊழியராகாதிருத்தல், 9. ஏழ்மையை நாடித் தாழ்மைபடாதிருத்தல், 10. எல்லாரோடும் இணங்கி நடத்தல்.

இப்பத்து விஷயங்களையும் அறிந்து நாம் நடந்து நம் மாணவர்கள் கடைபிடித்து ஒழுகுவார்களேயாகில், நாம் மேன்மையடைவோம். ஆதலால் நாம் சங்கங்களுக்கு தவறாமல் செல்வதால் அரிய விஷயங்களை அறிவதுடன் அநேகம் பேர்களுடைய கல்வித் திறமையையும், நன்கு ஏற்பட்டு நாமும் நன்மையடைய யேதுவாகிறது. ஆகையால் சங்கம் கூடும் தேதிக்கு தவறாமல் ஆஜராகி பாடங்களை எடுத்துக்கொண்டு சங்கத்தில் தைரியமாய் கற்பித்துக்கொடுத்து சங்கங்களையும் நம் மாணாக்கர்மார்களையும்

# செய் நன்றியறிதல்

(சோமசுந்தரம். கமாலியா முஸ்லீம் பாடசாலை.)

செய் நன்றி யறிதல் என்பது ஒருவன் தான் பிறர்க்குச் செய்யத் தக்க நன்றியை அறிதல் எனவும், பிறர் தனக்குச் செய்த நன்றியை அறிதல் எனவும், இரு பொருள் தோற்று விப்பதாகும் இவற்றுள் ஒவ்வொன்றும் மானிட ஜென்மம் எடுத்த எல்லாருக்கும் இம்மை, மறுமை, இரண்டிற்கும் துணை செய்யத் தக்க ஒப்புயர் வற்ற திப்பிய அறமா மென்பது எப் புலவர்களுக்கும் ஒப்ப முடிந்ததாகும். என்றேனும், எவராயினும் நமக்கு அற்ப உதவி செய்யினும் அவ்வற்ப உதவியை நம் உயிர் போமளவும் மறக்கலாகாது. அவ்வற்ப உபகாரிக்கு எக்காரணம் பற்றி, எவ்வளவு பெருந் துன்பம் வந்த காலத்தும் நாம் நம்மால் இயன்ற உதவி புரிந்தே தீரவேண்டும். நாம் நமது மனம், வாக்கு, காயம் என்னும் இவைகளால் இயன்ற உதவி செய்யலாம். தான் நன்மை செய்தாலாவது பசி, பிணி யாதிவற்றால், பிறர் வருந்தக் காணினும், கேட்கினும் தானே விரைந்து சென்று, அவர் துன்பத்தை நீக்கி மன மொழி மெய்களாலியன்ற உபகாரம் செய்தல் என்பது. இங்ஙனம் உபகரிக்குங்கால், அவ் வுதவியைப் பெறுவார் துயரத்தைக் கண்டு மன மிரக்க முற்று இவ் வுதவியை இது பொழுது இவருக்கு யாம் செய்யப் பெற்றோம் என்று மகிழ்ச்சி யடைந்து, முக மலர்ச்சியுடன் இனிய மொழி கூறி அன்னம் ஆடை முதலிய வற்றை அளித்தல் ஏற்ற வற்றைக் காலந் தாழாது செய்து முடிக்க வேண்டும். கொலைகளவாகிய தீச் செயல் புரிவாரைக் கண்டால் அந்தோ இக் கொடுஞ் செயலால் இவர் மீளா நரகிற்கு ஆளாகுவரே என்று உள்ளங் கசிந்து, அக் கொடுந் தொழிலால் வருந் தீங்குகளை எடுத்துக் கூறி அவர்களை நல் வழிப் படுத்த முயல

---

மேன்மைபடுத்துமாறு வேண்டிக்கொள்ளுகிறேன். இன்னும் இதைப்பற்றி அரிய விஷயங்களை எடுத்துரைத்து தெரியாத விஷயங்களை எடுத்துக்காட்டி தெரிவிக்கவேணுமாய் உபாத்தியாயர்களாகிய என் நண்பர்களையெல்லாம் மிகவும் வணக்கமாய் கேட்டுக்கொள்ளுகிறேன்.



வேண்டும். அதிகாரம் முதலிய வற்றால் செல்வாக்குப் படைத்திருப்பின் தன் வாக்குச் சகாயத்தாலும், செல்வம் படைத்திருப்பின், பொருள் வகையாலும் சரீர வலி யிருப்பின் உடல் முயற்சி யாலும், பிறர்க்கு உதவி செய்வதை யாவரும் மேற் கொள்ள வேண்டும்.

இதனை

"ஒல்லும் வகையால் அறவினை ஓவாதே.

செல்லும் வாய் எல்லாம் செயல்" என்னுந் தேவர் திருவாக்கு வலியுறுத்துமாறு காண்க.

இவ்வுலக வாழ்க்கையில் ஒவ்வொருவரும் பிறருதவி கொண்டு சுக வாழ்க்கை யடைய வேண்டுமே யன்றி பிற ருதவி இல்லாமல் வாழ முடியாது. ஒவ்வொருவரும் தமக்கு வேண்டியன வற்றையே செய்து பிறர்க்கு உதவி செய்யாதிருந்தால் உலகமே நடைபெறாது. இது நம் அனுபவத்தால் யாவரும் அறிந்துள்ளதே யாம்.

தமக்கென முயலா நோன்றாட்
பிறர்க்கென முயலுநர் உண்மையானே.

உண்டாலம்ம இவ்வுலகம் என்னும் புறப்பாட்டை நோக்குவோம். எந்த முயற்சியும் தன் பொருட்டாக மட்டுஞ் செய்யாது, பிறர்க் குதவியாகும் பொருட்டு செய்வார் இருத்தலாற்றான், இவ் வுலகம் நிலை பெற்றுள்ளதாகின்றது என்பது இதன் கருத்தாம். ஆகவே ஒவ்வொருவரும் பிறர்க் குதவி செய்யக் கடமைப் பட்டிருப்பதை அறியவேண்டும். இந்த உயர் குணம் வளர, வளர, தனக்கு வேண்டுமென்கிற பற்று முற்றும் அற்று விடும். பற்றற்றொழியவே பிற வுயிர்களையும் தம் முயிராகக் கருதும் அன்பு மேலிட்டு அருள் பெருவதாகும். மனத் தூய்மையால் புண்ணியம் பெருகி மோக்ஷம் சித்திப்பதாகும்.

"அற்றது பற்றெனில் உற்றது வீடு" என்ற முதியோர் வாக்குப் பிரத்தியச்சப் படுவதாகும். இவற்றை எல்லாம் கருதாது, எல்லாப் பொருளையும் தனக்கென ஈட்டிப் பிறர்க் குதவி செய்யாராயின் அவரது அவாவே அவரது அறிவைக் கொன்று புண்ணிய

பாவ உணர்ச்சியை மறைத்து, மேலும் மேலும் பிறவிக் கேதுவாகி நிற்கும். உலகத்தாரும் அவரை நடைப்பிணமாகக் கருதி யிகழ்வர். அவருக்கு மனத் தூய்மை வருவது மில்லை.

அவா வென்ப வெல்லா வுயிர்க்கு மெஞ்ஞான்றும்
தவா அப்பிறப் பீனும் வித்து.

என்பவாகலின் அவா வுடையார் ஒரு பொழுதும் மனச் சாந்தி பெற மாட்டார். பிறர்க்குத் துன்பம் செய்யாதிருத்தலே பெரியதோர் நன்றியாம். பறவைகளைச் சிறை செய்தலும் நாய், கழுதை முதலியவற்றைக் காரண மின்றி சுத்த விளையாட்டுத் தனத்திற்காகவே நையப் புடைத்தலும், எளியார்க்கு நலி வுறுத்தலும், இரப்போரை ஏசுதலும் இன்னோ ரன்ன பலவகையான தீச் செயல் செய்கின்றவர்கள் எத்தனை பேருளார். எவற்றானும் பிறர்க்குச் சிறிதும் இடுக்கண் செய்யாது வாழ்தலே மிக்க நன்றியாம். ஆகவே இயல்பவர் யாவரும் பிறர்க்கு உதவி செய்தலும் இயலாதார் பிறர்க்குத் தீங்கியற்றாமையும், ஆகிய இவ் விரண்டும் மேற் கூறிய படி செய் நன்றியாம். இதை மூன்று வகைப் படுத்துரைப் பாருமுளர். அவையாவன:— (1) ஒருவர் வருத்தங் கண்டவுடன் மன மிரங்கத் தாமே வலியச் சென்று வுதவுதல் தலையாய நன்றி. (2) வருந்துவார் வந்து கேட்பின் இடையாய நன்றி. (3) கேட்ட பின்னும் மன மிரக்கமின்றி அலைப் புறுத்தி வெறுப்போடு செய்யும் உதவி கடையாய நன்றி. இவை யாவும் பெருவார்க்குத் துன்பந் துடைத்து இன்பம் பெருக்குவனவே யாதலின் நன்றியாகவே அமைவனவாம்.

(1) அன்றியும் இரக்கங் காரணமாகச் செய்தல், (2) முன் தமக்குச் செய்த நன்றி காரணமாகச் செய்தல், (3) பின் தமக்கு வரும் நிலைக்காரணமாகச் செய்தல் என்று நன்றியை மூன்று வகுப்பாக்கி உரைத்தலு முண்டு. இனி பிறர் தனக்குச்செய்த நன்றியை மறவாதறிதலாகாது. தனக்கு அவர் செய்த நன்றியை நினைந்து, அவருக்கு ஏதேனும் துன்பம் வருமாயின் அக் காலத்துத் தன்னுயிரையுங் கொடுக்க ஒருப்பட்டு நிற்றலாம் - நன்றியினளவின் சிறுமை பெருமை கருதாது அதன் பயனையே கருதி மதிக்க வேண்டும்



தனக்குச் செய்த நன்றி சிறிதாகவும், தான் அவருக்குப் பேரிதோர் உதவி செய்யும்படி நேருமாயின் அக் காலத்து அவர் முன் தமக்குச் செய்த நன்றியின் பயனைக்கருதி, தாம் செய்யத் தக்கன எத்துணைப் பெரு நன்றியே யாயினும் அதனை அப்பொழுதே மன மகிழ்ந்து செய்யவேண்டும்.
இதனை

தினைத்துணை நன்றி செயினும் பனைத் துணையாக்
கொள்வார் பயன் றெறிவார்.

எனவும்,

" அல்லியரும் பதமும் அடங்காயுங் குள நெல்லும் நல்ல கொழும் பழங் கிழங்குக் தந்து நவை தீர்த்தார்க்கில்லையே கைம் மாறு" எனவும் தேவர்கள் கூறிய வற்றால் நன்கு தெளிக.

அன்றியும் ஒருபொழுது ஒரு நன்றி செய்தவர் பிற்காலத்துப் கல துன்பங்கள் செய்தாராயினும், அவர் செய்த நன்றி ஒன்றையே பெரிதாக இடை விடாது நினைந்து பாராட்டி அவர் செய்த தீமைகளை எல்லாம் நினையாது விட்டு விடவேண்டும்

கொன்றன்ன இன்னா செய்யினும் அவர்
செய்த நன்றி ஒன்றுள்ளக் கெடும்.
" நன்றி மறப்பது நன்றன்று நல்ல
தன்றே மறப்பது நன்று"

" என்னன்றி கொன்றார்க்கும் உய் வுண்டாம் உய் வில்லை செய் நன்றி கொன்ற மகற்கு"

" ஆன்முலை அறுத்த அறன் இல்லோருக்கும்
மாண் இழைகளிர்க் கரு சிதைத்தோர்க்கு
பார்ப்பார் தப்பிய கொடுமை யோர்க்கும்
பிரயாச் சித்த முண்டு.

சிதைவகல் காதல் தாயைத்
தந்தையைக் குருவை தெய்வம்,
பதவி அந்தணரை ஆவைப்
பாலரை பாவை மாரை (தொடரும்)

# பூமித் தொண்டு

(Right Service)

பூமித்தொண்டு அல்லது உழவு "தொழுதூண் சுவையினும் உழுதூண் இனிது" என்று கூறப்பட்டுள்ளது. தற்கால நாகரீகம் இதைக் கூலிகட்டாத் தொழில் என்று கை விட்டு விட்டது. தமிழ் நாட்டில் பூமித் தொழிலை நம்பி இருப்பவர்கள் 100-க்கு 82 நண்பர்கள் எனக் கணக்கிட்டிருக்கிறார்கள். இவ்வளவு நபர்களிடமிருந்தும் படிப்பாளிகள் இதற்கு கௌரவத்தை கொடுக்காததால் விவசாயிகளும் பக்தியின்றி செய்து வருகிறார்கள். இதனால் கால மழையில்லை. பூமிதேவியும் கொஞ்சம் விட்டுப் பார்க்கிறாள். பயிர்கள் புஷ்டியாய் வளராமல் இருப்பதால் தானியங்களும் புஷ்டியாயிருப்பதில்லை. இவ்வுணவால் விவசாயிகள் வலிவு பெறாமல் இருப்பது ஆச்சர்யமாகுமா? விவசாயிகளே வலிவிழக்கையில் விலைக்கு வாங்கிச் சாப்பிடுகிறவர்கள் கதி "அம்மியும் குழவியும் ஆகாயத்தில் பறக்கும் சமயத்தில் இலவம் பஞ்சின்" கதிபோலாகுமென்பதை சொல்லவும் வேண்டுமோ? இதனால் புத்தி பலமாத்திரமின்றி. சரீர வலிவும் குறைந்து, ஆயுளும் க்ஷீணித்து, பலவித நோய்களுக்காளாகி வம்சமும் க்ஷீணித்து, வரும் காட்சியை வர்ணிக்கவும் வேண்டுமா? டாக்டர் கூட்டங்கள் அதிகமாகியும், வைத்திய சாலைகள் நாளொரு மேனியாய் வளருவது கண்களில் படவில்லையா? வைத்திய சாலைகள் வளர வளர ஆலயத் தொண்டு குறைந்து வருமென்பதை பரக்கக் கூறவும் வேண்டுமா?

ஞானிகள்:—பயிரிட்டதை சாப்பிடும் வரையில் பயிரிடுதல் முதற் கடமை யென்பதை தமிழ் நாடு மதமாகக் கொண்டிருக்கிறது. இதை தேவ கட்டளையாகவும் கூறுகிறது. வட நாடு, மேல் நாடுகள் இதை பூமியின் வேள்வியாகக் கொண்டிருக்கவில்லை. இதைக் காட்டிலும் தமிழகத்திற்கு இதர சிறப்பு முண்டா? இதில்

---

வாதை புரிகுநர்க்கும் உண்டாகும்.
ஆற்றலாம் ஆற்றல் மாயா
உதவிகொன் றோர்க்கென்றேனும்
ஒழிக்கலாம் உபாய முண்டோ."

# சங்கக் குறிப்புகள்.

## (ஆரம்பாசிரியர் சங்கம் தென்காசி)

தென்காசி ஆரம்ப ஆசிரியர் சங்கக் கூட்டம் ஒன்று ஸ்ரீமான் A. சங்கரலிங்க உபாத்தியாயர் அவர்கள் தலைமையின் கீழ் 6-10-34-ல் நடைபெற்றது. அது காலை ஸ்ரீமான் வைத்தியலிங்கம் பிள்ளை யவர்கள் "பாலர் மனப்பான்மையும் புதிய போதனை முறையும்" என்ற விஷயத்தைப் பற்றி சொற் பொழிவு ஆற்றினார்கள்.

## ஆசிரிய மானேஜர்கள் சங்கம்

வேலூர்

13-11-34

வேலூருக்கு அடுத்த சைதாபேட்டை ஹையர் எலிமென்டரி பாடசாலையில் ஷை சங்கத்தின் ஒரு பொதுக் கூட்டம் கூடியது. அது சமயம். திரு. C. துரைசாமி ஐயா, B. A. B. L. அட்வகேட், அவர்களும். S. இராமானுஜ ஐயா, அவர்களும் ஷை சங்கத்தின் சார்பாக வட ஆற்காடு ஜில்லாக் கல்விச் சபைக்கு அங்கத்தினராக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

---

ஜாதி பேதம் கிடையாது. ஆறு வருணத்தார்களுக்கும் பொதுவான கடமை. ஆண் பெண் வித்யாசமில்லை. காளைகளின் கொட்டையடித்து ஏரில் கட்டி தாத்துக் கோலால் இம்சிப்பது சண்டாளத் தொழிலென்று ஒதுக்கப்பட்டாலும், மண் வெட்டி கொண்டு செய்வது கடமையாக்கப்பட்டு ஞானிகள் அனைவரும் நடத்திக் காட்டினார்கள். இவர்களையே தொண்டர்கள் யெனக் கூறுகிறோம். ஆலயத்தொண்டில் இதுவே முதன்மைப் பட்டது. திருப்பிச் சொல்லில் தமிழ் நாகரீகப் பெருமை யென்பது இதுவே யாகும். சுய நலத்தைக் கருதி மனித சக்திக்கு மீறிய நிலங்களை மாட்டைக் கொண்டு உழுதல் தொழுகையாகும், "வெட்டி எடுத்த கைக்கு கெட்டியுண்டு" மண் வெட்டி கொண்டு செய்தல் தொண்டாகும்.

# மாஜி கல்வி மந்திரியின் பொன் மொழிகள்.

சர். ஏ. பரசுராம பத்ரோ அவர்கள் சென்னை மாகாண சர்க்காரின் கல்வி மந்திரியாக சில காலம் இருந்தார். இவர் காலத்தில் தான் ஆந்திர சர்வ கலாசாலை ஸ்தாபிக்கப்பட்டது. ஆரம்பக் கல்விக்கு பெரும் தொண்டும் புரிந்திருக்கிறார். இவர் தன் அநுபவத்தைக் கொண்டு 1934-ஆம் நவம்பர்-மீ 18-ந்தேதி பெஜவாடாவில், கல்வி வார கொண்டாட்டத்தின் போது பேசியதாவது, "தற்போது கல்வி கற்றவரிடையே வேலை யில்லாத் திண்டாட்டம் அதிகரித்துக்கொண்டு வருவதற்குக் காரணமாம் இருக்கிறது. ஏனெனில் இம் முறை, குமஸ்தாக்களாகவும், வேலைக்காரர்களாகவும் அரசாங்கத்துக்கு வேலை செய்யும்படி செய்கிறது. இந்நிலையில் சர்வ கலாசாலைகளை ஏற்படுத்திக் கொண்டு போவது பிறயோஜன மற்றச் செய்கை. ஆந்திர சர்வ கலாசாலை எந் நோக்கத்துக்கு ஏற்படுத்தப்பட்டதோ அது நிறைவேறவில்லை. அதற்காக செலவழித்த பணம் பூராவும் பிரயோஜன மற்றதாய் விட்டது. அச் சர்வ கலாசாலைக்கு செலவழித்த பணம் அந்த குறிப்பிட்ட இடத்துக்கு கட்டாய ஆரம்பக் கல்விக்கு செலவழித்திருந்திருப்பின் எவ்வளவோ பிரயோஜனகரமாய் இருந்திருக்கும். தற்போதைய அரசாங்கத்தார் கட்டாய இலவச கல்விக்கு யாதொரு நடவடிக்கைகளும் எடுத்துக் கொள்ளவில்லை. 1927-ம் ஆண்டு எந்நிலையில் விடப்பட்டதோ அந் நிலையிலேயே இருக்கிறது. உண்மையில் அரசாங்கத்தாருக்கு ஆரம்பக் கல்வியை பரப்ப எண்ண மிருக்குமானால் கல்வி மந்திரி சென்னை ராஜதானியின் பல பாகங்களுக்கும் சென்று நேரில் பார்த்தும், விசாரித்தும் ஆசிரியர்கள், மானேஜர்கள் அடங்கிய மகா நாடுகளை கூட்டு வித்து, அபிப்பிராயங்களை தெரிந்துகொண்டு எங்கெங்கு பள்ளிக் கூடங்கள் இல்லையோ அவ்விடங்களி லெல்லாம் பள்ளிகளை திறக்க வேண்டிய சௌகரியங்களை செய்து தரவேண்டியது. பள்ளிக் கூடங்களே விருத்தி அடையாத நிலையில் யிருக்கையில் அதை வேருடன் பிடுங்கி எறியும் தன்மை வாய்ந்த சாம்பியன் ஸ்கீம் வந்தது வெகு புதுமையாக இருக்கிறது. அது ஆரம்பக் கல்வியின் விருத்திக்கி இடையூறானது. அது ஆரம்பக் கல்வியானது விருத்தி யடைந்தா லொழிய

# ஆசிரிய மானேஜர்கள் சங்கம் சேலம்.

11-11-34

ஷை சங்கத்தின் பொதுக் கூட்டமொன்று கொகை, கோகுல விலாஸ் எலிமெண்டரி பாடசாலையில் கூடிற்று. சேலம் ஜில்லா கல்விச் சபை அங்கத்தினர் திரு. என். வென்கட ரமணன் அவர்கள் தலைமை வகித்தார். கீழ் கண்ட தீர்மானங்கள் ஏக மனதுடன் நிறைவேறிற்று.

1. 3, 7. 25–வது வார்டுகளில் ஏற்கனவே எய்டட் பாடசாலைகள் இருக்கு மிடத்தில் முனிசிப்பாலிடியார் தங்கள் முனிசிபல் பாடசாலைகளை திறந்துவைத்தது மிகவும் தப்பான காரியமென்பதை இக்கூட்டம் கண்டிக்கின்ற தென்பது.

2. தற்போது கல்வி மந்திரியார் கொண்டு வந்திருக்கும் ஆரம்பக் கல்வி திருத்த மசோதாவில், ஜில்லாக் கல்விச் சபைகள் தீர்மானிக்கும் தீர்மானங்களை டைரக்டர் துரை யவர்கள் மாற்றவோ, ரத்து செய்யவோ, டைரக்டருக்கு அதிகாரத்தை கொடுக்கும் விஷயத்தை இச் சங்கம் ஆதரிக்கவில்லை யென்பது.

3. ஆசிரிய மானேஜர்களுக்கு ஜில்லாக் கல்விச் சபைகளில் அதிகப்படியான ஸ்தானங்கள் கொடுக்கவேண்டு மென்பது.

4. கவர்ன்மெண்டாரால் ஏற்படுத்தி யிருக்கும் (Text Book Committee) யில், சென்னை மாகாண ஆசிரியர் சங்கத்திற்கு ஓர் ஸ்தானம் கொடுக்கவேண்டு மென்பது.

---

இந்தியா முன்னேற்ற மடையாது என்பது திண்ணம். ஆகையால் அரசாங்கத்தார் அதற்கு உண்டான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவேண்டும்."

இம்மாதிரி பேசிய மாஜி மந்திரியின் வார்த்தைகள் நம் மகாண அரசாங்கத்திற்கும் கல்வி மந்திரி செவிகளுக்கு எறுமா வென்பது தான் ஒரு கேள்வி.

# ரஷியாவில் பொது ஜனக் கல்வி

ரஷியாவில் பதின் மூன்று வருடங்களுக்கு முன் பெண்களில் படித்தவர்கள் 100-க்கு 44-பேர்களே யிருந்தனர். 13-வருடங்களுக்குப் பிறகு 100-க்கு 92-பேர்களாக அதிகரித்திருக்கின்றனர். 113000-பெண்கள் ஜட்ஜிகளாக வேலை பார்க்கின்றனர்.

* * * *

நம் நாட்டு மக்களுக்கு கல்வி கற்க புத்தகங்களை மட்டுமே கருவியாக உபயோகப் படுத்துகின்றனர். ரஷியாவில் துண்டுப் பிரசுரங்கள், படக் காட்சிகள், ரேடியோ, நாடகம் பொருட்காட்சி, சுற்றுப் பிரயாணம், பிரசங்கம் ஆகிய இவற்றின் மூலமாக வெல்லாம் கல்வி போதிக்கப்படுகின்றன.

* * * *

சாமர்த்தியம் பெற்ற டாக்டர்கள் பார்வையின் கீழ் தேகப் பயிற்சி சங்கங்களில் ஆண்களுக்கு வேலைசெய்வதற்கும், போர் புரிவதற்கும் உபயோகமான முறையில் தேகப்பயிற்சி யளிக்கப்படுகின்றது. பயிற்சி முடிந்ததும் ஒவ்வொருவருக்கும் ஒரு பேட்ஜ் கொடுக்கப்படுகிறது. அதில் “வேலை செய்யவும் போர் செய்யவும் தயாரிக்கப்பட்டிருக்கிறது” என்று எழுதப்பட்டிருக்கிறது. இம்மாதிரி ரஷியாவில் 600000-பேர் பேட்ஜ் பெற்றிருக்கின்றனர்.

## ஆரம்பக் கல்விக்கு ரூ. 2500000

திரு. P. V. கிருஷ்ணய்ய சௌத்திரி M. L. C. அவர்கள் ஆரம்பக் கல்வி விருத்தியடையும் பொருட்டு, ஆரம்பாசிரியர்களின் சம்பளங்களை அதிகப்படுத்துவதற்கும், எய்டட் பாடசாலை உபாத்தியாயர்களுக்கு அதிகப்படியான கிராண்டைக் கொடுப்பதற்கும் சுமார் 25 லட்சம் ரூபாய் அரசாங்கம் கொடுக்கவேண்டு மென்பதாக சென்னை சட்ட சபையில் ஓர் தீர்மானம் கொண்டுவந்திருக்கிறார். இத்தீர்மானத்தை ஆதரிக்கும்படி எல்லா ஜில்லாவிலுள்ள ஆசிரியர்களும், ஆசிரிய மானேஜர்களும் சட்டசபை அங்கத்தினர்களைக்கண்டு ஆமோதிக்கும்படி ஏற்பாடுகள் செய்வார்களாக.

# ஆரம்பாசிரியர் சங்கம் திருப்பூர்.

14-11-34

ஷை சங்கத்தின் 23-வது வருடாந்திர கொண்டாட்டம், சபாபதி புரம் சாதரன் மிஷன் பாடசாலையில், கோவை ஜில்லாக் கல்வி யதிகாரி யவர்கள் திரு K. சங்கர மேனன் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் நடைபெற்றது. திரு. E. T. பசுபதி பிள்ளை (டிப்டி இன்ஸ்பெக்டர்) சங்கத்தின் சார்பாக அக்கிராசனரை வரவேர்த்து மாலை சூட்டினார். தலைவர் தமது சொற்பொழிவில், நாம் எப்பொழுதும் குறைந்த சம்பளத்தில் திண்டாடிக் கொண்டிருக்கும் எளிய உபாத்தியாயர்களிடத்தில் காருண்ய முடையவரென்றும், இவ்வாசிரியர்கள் கிடைத்ததை திருப்தியாகக்கொண்டு, எதிர் கால ஜன சமூகத்திற்கு பொருப்பாளர்களான குழந்தைகளை சரியான வகையில் கல்வி கற்பித்து முன்னுக்கு கொண்டுவர வேண்டியது அவர்களது கடமை யென்றும் வற்புறுத்திக் கூறினார். பிறகு தமிழ்ப் பண்டிதர். திரு, T. S. நாராயண ஐயர் “ தற்கால ஆசிரியர்களும் அவர்களது முன்னேற்றமும் ” என்னும் விஷயத்தை பற்றி ஓர் சொற்பொழிவை நிகழ்த்தினார்.

# சுக வாழ்வு

நாம் நமது நாட்டில் சுகமாக வாழவிரும்பினல் வியாதிகள் என்னும் சத்ருக்களுக்கு இடங்கொடாமல் நமது தேகத்தைப் பார்த்துக்கொள்ளவேண்டும். நீங்கள் தேக அசதி, மலச்சிக்கல், நரம்புகளின் தளர்ச்சி, ஞாபகமின்மை மூத்திர சம்பந்தமான வியாதிகளால் கஷ்டப்பட்டால் உடனே,

## ஆதங்க நிக்ரஹ மாத்திரைகளை

உபயோகியுங்கள். தேகத்தை வஜ்ர சரீரமாக்கி வைரக்கற் கோட்டையைபோல் பாதுகாக்கும். 32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூபா 1.

இனும்! இனும்!! இனும்!!!

**"இன்ப வாழ்க்கையிலடைந்த சக்தி"**

உடனே விலாசத்தை தெரிவியுங்கள்:

**ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,**
**26, பிராட்வே, மதராஸ்.**

---

காலஞ்சென்ற ருவ்சாஹிப்
தி. ம. பொன்னுசாமி பிள்ளை அவர்கள்
இயற்றிய

## இனிய தமிழ் நாவல்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| கமலாட்சி .... | .... | 1 | 12 | 0 |
| விஜய சுந்தரம் .... | .... | 2 | 0 | 0 |
| ஞான சம்பந்தம் .... | .... | 1 | 4 | 0 |
| சிவ ஞானம் .... | .... | 1 | 4 | 0 |
| ஞானப் பிரகாசம் .... | .... | 1 | 12 | 0 |
| ஹரிச்சந்திர (நாடகம்) | .... | 1 | 0 | 0 |


**ஆரம்பக் கல்வி புத்தகசாலை,**
**94-95, புதுத் தெரு, மண்ணடி மதராஸ்.**

---

# 35 வருடங்களாய்

உலகப் பிரசித்தி பெற்ற திரேக புஷ்டிக்கும் தாது புஷ்டிக்கும் சிறந்த டானிக்

40 மாத்திரைகள் அடங்கிய



## மதனமஞ்சரி

இம்மாத்திரைகள் அஜீர்ணம், மலச்சிக்கல், ஞாபகக் குறைவு நரம்பு தளர்ச்சி இவைகளை நாசமாக்கி திரேக புஷ்டியும் தாது புஷ்டியும் கொடுத்து

டப்பி 1-க்கு விலை ரூபா 1.

இல்லற வாழ்க்கையில் இன்பத்தையும் ஊக்கத்தையும் தரும்.

இனும்! வைத்திய வித்தியா இனும்!!

இப்புத்தகம் வேண்டுவோர் கடிதம் எழுதினல் தபால் செலவு இல்லாமல் அனுப்பப்படும்.

**மதன மஞ்சரி பார்மஸி. 1-94, சைன பஜார் ரோட், மதராஸ்.**

## எமது தமிழ்ப் பிரசுரங்கள்

வி. எஸ். சிவசாம்ப ஐயர், பி. ஏ. எல். டி. இயற்றியவை.

### கலைமகள் வாசகங்கள்

வி. வீரராகவன், எம். ஏ. இயற்றியவை.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| கலைமகள் வாசகம் முதல் வகுப்பு | | | | | 0 | 2 | 0 |
| இரண்டாம் வகுப்பு | 0 | 3 | 0 | நான்காம் வகுப்பு | 0 | 5 | 0 |
| மூன்றும் வகுப்பு | 0 | 4 | 0 | ஐந்தாம் வகுப்பு | 0 | 6 | 0 |

### கலைமகள் கதாவாசகம்

| | | | | |
|---|---|---|---|---|
| முதல் புத்தகம் விலை | .... | 0 | 2 | 0 |
| இரண்டாம் புத்தகம் விலை | .... | 0 | 3 | 0 |

### கலைமகள் கணித நூல்

எஸ். தருமலிங்க நாய்க்கர்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1-வது புத்தகம் (1, 2, வகுப்பு) அணா | | 0 | 5 | 0 |
| 2-வது புத்தகம் (3வது வகுப்பு) | ,, | 0 | 6 | 0 |
| 3-வது புத்தகம் (4வது வகுப்பு) | ,, | 0 | 8 | 0 |
| 4-வது புத்தகம் (5வது வகுப்பு | ,, | 0 | 9 | 0 |

### நீதிக்கட்டுரைக் கோவை

வி. ஞானதிக்கம், பி. ஏ. எல். டி.

| | | | | |
|---|---|---|---|---|
| முதல் புத்தகம் அணா | .... | 0 | 4 | 0 |
| இரண்டாம் புத்தகம் ,, | .... | 0 | 7 | 0 |
| கலைமகள் நீதிக்கதைகள் ,, | .... | 0 | 4 | 0 |

### இந்து தேச சித்திர சரித்திர கதைகள்

டி. ஆர். ரங்கசாமி ஐயங்கார் எம். ஏ., எல். டி.

| | | | | |
|---|---|---|---|---|
| முதற் புத்தகம் விலை அணா | .... | 0 | 4 | 0 |
| இரண்டாம் புத்தகம் ,, | .... | 0 | 5 | 0 |

எஸ் ஸ்ரீனிவாச அய்யர் அவர்கள், பி. ஏ., எல். டி. எம். ஆர்.ஏ.எஸ்

| | | | | |
|---|---|---|---|---|
| வட ஆற்காடு பூகோளம் அணா | .... | 0 | 4 | 0 |
| செங்கற்பட்டு பூகோளம் ,, | .... | 0 | 5 | 0 |

### பாலர் கணிதம்

எம். எஸ். சுந்தரேஸ்வரன், எம். ஏ. எல். டி.


| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| முதற் புத்தகம் விலை | 0 | 5 | 0 | இரண்டாம் புத்தகம் | 0 | 7 | 0 |
| மூன்றும் புத்தகம் | 0 | 6 | 0 | நான்காம் புத்தகம் | 0 | 8 | 0 |
| ஐந்தாம் புத்தகம் | 9 | 0 | 0 | | | | |

**எடுகேஷனல் பப்ளிஷிங் கம்பெனி.**

நெ. 2, சுங்குராம செட்டி ஸ்டிரீட், ஜார்ஜ் டவுன், மதராஸ்.

# MALAYALA VAIDYA NILAYAM

POST BOX No. 53, MADRAS



**மலையாள வைத்திய நிலையம்**

தபால் பெட்டி நெ. 53,

மதராஸ்.

## கையில் வெண்ணையிருக்க
## நெய்யிக்கு ஏன் கவலைப்படவேண்டும்?

இதோ

ஸ்திரீகளுக்கு ஓர் வரப்ரசாதனி

# அபலாரக்ஷிணி

**உத்தம புருஷர்களின் கடமைகள் என்ன !**



ஸ்திரீகள் மாதா மாதம் கிரமந்தப்பாமல் மாதவிடாய் ஆகிவருகின்றனரு யென்பதையே மிக முக்கியமாய்க் கவனிக்க வேண்டும். இதைக் கவனிக்கா விடில், பலவித ரோகங்கள் உண்டாகி, வீட்டு விலக்கம் தவறி, நெடுநாள் கர்ப்பந்தரிக்காமலேயே சரீரம் ஸ்தூலித்து, மாதவிடாய் காலத்தில் வயிற்றுவலி பொறுக்கமுடியாமல், ஐயோ, ஆவென்று கதறிதரையில் விழுந்து புழுத்துடிப்பதுபோல் துடித்துப் புரண்டு அழுவார்கள். அப்படிப்பட்ட ஸ்திரீகளுக்கு எம்முடைய "அபலாரக்ஷிணி" என்ற திவ்விய ஔஷதத்தை வீட்டு விலக்கம் வருவதற்கு முன்னமே வரவழைத்து உபயோகிக்க கர்ப்பாசயத்தைச்சார்ந்த ரோகங்களை குணப்படுத்தி மறுதூரத்தில் சற்புத்திர சந்தானம் உண்டாகச் செய்யுமென்பதை நிச்சயித்துக் கூறுகின்றோம்.

விலை செட் 1க்கு ரூபா 3—8—0



# தமிழ்க் கடல் பிரசுரங்கள்

| | | அ. | பை |
|---|---|---|---|
| 1 - வகுப்பு : | ஆரம்ப வாசகம் - I | 2 | 6 |
| 2 - வகுப்பு : | ஆரம்ப வாசகம் - II | 3 | 6 |
| 3 - வகுப்பு : | ஆரம்ப வாசகம் - III | 4 | 0 |
| | குட்டிக் கதைகள் - முதற் புத்தகம் | 2 | 0 |
| 4 - வகுப்பு : | ஆரம்ப வாசகம் - IV | 5 | 0 |
| | குட்டிக் கதைகள் - இரண்டாம் புத்தகம் | 3 | 0 |
| | ஆகாய விமானம் | 2 | 0 |
| | சிறுவர் கடமை | 2 | 6 |
| 5 வகுப்பு : | ஆரம்ப வாசகம் - V | 6 | 0 |
| | குட்டிக் கதைகள் - மூன்றாம் புத்தகம் | 4 | 0 |
| | சிறுவர் கடமை | 2 | 6 |
| | பெரிய உலகத்துச் சிறிய பிள்ளைகள் | 5 | 0 |
| I பாரம் - | தமிழ்க் கடல் வாசகம் - முதற் புத்தகம் | 7 | 0 |
| | சிறுவர் கதைகள் - முதற் புத்தகம் | 3 | 0 |
| II பாரம் - | தமிழ்க் கடல் வாசகம் - இரண்டாம் புத்தகம் | 8 | 0 |
| | சிறுவர் கதைகள் - இரண்டாம் புத்தகம் | 3 | 0 |
| III பாரம் - | தமிழ்க் கடல் வாசகம் - மூன்றாம் புத்தகம் | 8 | 0 |
| | சிறுவர் கதைகள் - மூன்றாம் புத்தகம் | 4 | 0 |
| | உடல் நலம் | 4 | 6 |
| IV பாரம் - | தமிழ்க் கடல் வாசகம் - நான்காம் புத்தகம் | 10 | 0 |
| | லண்டன் மாநகரம் | 6 | 0 |
| IV. பாரம் - | மேல் நாட்டுப் பேரறிஞர் | 10 | 0 |

## தமிழ்க் கடல் ஆபீஸ்

சாந்தோம் - மயிலை, சென்னை

# ஜீவாம்ருதம்

## பலஹீனம்

அல்லது

## நரம்புத் தளர்ச்சிக்கு

## கைகண்ட ஔஷதம்




உங்களுக்கு வேலை அதிகமாயிருக்கிறது. ஆயினும் வேலை செய்யமுடியவில்லை. காரணம் பலக் குறைவு. சரீரம் சோர்வடைகிறது உலக இன்பங்களில் ஈடுபட முடிகிறதில்லை. வயது அதிகம் ஆகவில்லை. ஆனால் வயதிற்குத்தக்க சுறுசுறுப்பும் ஜீவசக்தியும் இல்லாமல் ஏக்கங்கொள்ள வேண்டியதாயிருக்கிறதல்லவா? இந்த மனோசஞ்சலத்தை ஒரு பாட்டில் ஜீவாமிருதத்தைக் கொண்டு தகர்த்தெறியுங்கள். ஜீவாமிருதத்தை உட்கொண்டவர்கள் கவலையின்றி சுகமாக வாழ்கிறார்கள். வாழ்வின் பூர்ண பலன் அனுபவிக்க ஜீவாமிருதத்தைவிட உயர்ந்த நண்பன் வேறு கிடையாது.

எல்லாவிடங்களிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர்கள் :— ஆயுர்வேதாஸ்ரமம், தபால்பெட்டி நெ. 287, மதராஸ்

பி. வீரராகவன். அவர்களால். சென்னை மண்ணடி, புதுத்தெரு. நெ. 94' 95, இல்லத்தில் "அசோஸியேஷன்" அச்சுக்கூடத்தில் அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.